# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-6 • Issue-6 • ஏப்ரல்-2025 • April -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com




## தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தடுக்கும் மோசமான மொழி அரசியல்



## இதுவரை சுமார் ரூ.8 கோடி உதவியுள்ள 2011 பேட்ஜ்

பாராட்டிய தென்காசி SP திரு.அரவிந்த் அவர்கள்



## 'நாவலர்' நா.மு.வேங்கடசாமி நாட்டார்



## கொடைக்கானலில் விடுதி உரிமையாளரை எரித்து கொன்ற 4 பேர் கைது

காவல்துறையினருக்கு DSP திருமதி.மதுமிதா பாராட்டு

திரிபலா பொடியின் அளப்பரிய நன்மைகள்


இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



அதிர்ஷ்டமும், லாபமும் சேர உள்ள 5 ராசிகள்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Tamilnadu

# போலீஸ் பார்வை

ஏப்ரல் 2025 மலர் 10 இதழ் 6



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S. ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only




# தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தடுக்கும் மோசமான மொழி அரசியல்



பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி.பண்பாடு, கலாச்சாரத்தை உலகுக்கு எடுத்துரைத்தது நமது தமிழ். இன்னும் 10,000 ஆண்டுகளுக்குப் பிறகும் அழிவில்லாத ஞான வாழ்வியல் முறையை மனித குலத்திற்கு வடித்து தந்த தெய்வீக புலவர் அய்யன் திருவள்ளுவர் அவர்கள் தந்த தெய்வீக திருக்குறளே உலகெங்கும் தமிழ் மொழியின் சிறப்பை பறைசாற்ற வல்லது. அதுதமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உகந்ததாகும்.

மேலும் தமிழ் மொழியின் பெருமையை உலகெங்கும் கொண்டு செல்ல பாரதியார் போன்ற தமிழ் கவிஞர்கள் தங்களது கவி தத்துவம் மூலம் தமிழ் மொழியையும் தமிழ் மொழியின் சிறப்பையும் உலகுக்கு எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால் நமது தமிழ் அறிஞர்கள் முன்னோர்கள் யாரும் தமிழ் மொழியை வைத்து அரசியல் செய்ததில்லை என்பதுதான் உண்மை.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் தங்களது அரசியல் சுயலாபத்திற்காக தமிழ்மொழியை வைத்து அரசியல் செய்கின்றனர். மொழியால் லாபம் தேடுகின்ற அவல நிலைக்கு தமிழக அரசியல் தரம் தாழ்ந்து விட்டது என உண்மையான தமிழ் ஆர்வலர்கள் பலர் வருத்தத்துடன் கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும் தமிழ் மொழியை வைத்து கேவலமாக அரசியல் லாபம் தேடும் தமிழ் அரசியல்வாதிகளின் இந்த போக்கு நீடித்தால் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படும் அபாயம் உள்ளதை மொழி அரசியல் செய்யும் தமிழ் அரசியல்வாதிகள் உணர வேண்டும் என்பது பெரும்பாலான தமிழ் ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

✍ **ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

# ஆர்மோனிய சக்கரவர்த்தி டி.எம்.காதர்பாட்சாவின் தெய்வீகப் பாடல்கள்

நம் பாரத நாடு பழம் பெரும் பண்புகளையும் கலாச் சாரத்தையும் கொண்ட நாடாகும். நம் பாரரத தேசத்தில் தமிழகம் ஒரு ஆன்மீக ஸ்தலமாக திகழ்ந்துள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்நாடு அனைத்து மதங்களும் ஒற்றுமையாகவும் வாழக்கூடிய ஆன்மீக தமிழ்நாடாகவும் விளங்குகின்றது.

**தெய்வீகத் தமிழ்**

ஆதியில் தெய்வீகத் தமிழ் சித்தர்களாலும், ரிஷிகளாலும் யோகிகளாலும் வளர்க்கப்பட்டது. தமிழகத்தில் அனைத்து மதத்தில் இருந்தும் சித்தர்கள் தங்கள், தங்கள் நம்பிக்கை சார்ந்த வழிபாட்டால் தெய்வீகத் தமிழில் ஆன்மீகத்தை வளர்த்தார்கள்.

உதாரணமாக அகத்தியர், திருமூலர், போகர் இன்னும் பல சித்தர்களும் இஸ்லாம் மார்க்கத்தில் யாக்கோபுச் சித்தர், தக்கலை பீர் முகம்மது அப்பாவும், குணங்குடி மஸ்தான் சாகிப்பும் இன்னும் பல தமிழ் ஆன்மீக இஸ்லாமிய அன்பர்களும் கிறிஸ்தவ மதத்தில் வீரமாமுனிவர் என்ற கானஅஸ்டான்டியோ கியூசெப் பெஸ்கி என்ற சித்தரும் இன்னும் கிறிஸ்தவ சித்த அறிஞர்களும் தெய்வீக தமிழை வளர்த்தார்கள்.

தெய்வீகத் தமிழ் ஒவ்வொரு காலமாக தமிழ்ச் சங்கமாக நிறுவி வளர்க்கப்பட்டது. சித்தர்கள் காலம் முடிந்து தமிழ்ப் புலவர்கள் காலமும் கவிஞர்கள் காலமும் வரத்துவங்கியது தெய்வீகத் தமிழ் புலவர்களாலும் கவிஞர்களாலும் வளர்க்கப்பட்டது.

**முத்தமிழாக மாறிய தமிழ்**

ஒவ்வொரு கால கட்டத்திலும் தெய்வீகத் தமிழ் வளர்க்கப்பட்டது. பின்பு முத்தமிழால் வளர்க்கப்பட்டது.

**முத்தமிழ்: இயல், இசை, நாடகம் சேர்ந்தது முத்தமிழாகும்.**

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

ஆரம்பத்தில் இயல்பாக வசனம் பேசும் தமிழாக இருந்தது. பின்பு இசையால் தெய்வீகத் தமிழ் வளர்க்கப்பட்டது. காலப்போக்கில் இயல், இசை, நாடகமும் ஒன்று சேர்ந்து முத்தமிழாக மேடைகளில் வளர்க்கப்பட்டது.

**நாடகக் கலைக்கு உயிர் கொடுத்தவர்:**

அந்தக் காலத்தில் வசனங்களாலும் தங்கள் வாய்ப்பாடல்களாலும் பல நாடகக் கலைஞர்கள் தெய்வத் தமிழை வளர்த்துள்ளார்கள். ஆனால், தன்னுடைய ஆர்மோனிய இசையாலும் தன்னுடைய கம்பீரமான தெய்வீகக் குரலாலும் நாடகக் கலைக்கு உயிர் கொடுத்தவர் ஆர்மோனிய சக்கரவர்த்தி டி.எம். காதர்பாட்சா ஆவார்.

திருச்சியில் உள்ள உறையூரில் வாழ்ந்தவராவார். அந்தக் காலத்தில் திருச்சியும், தஞ்சாவூரும் நாடகத்தின் சொர்க்க பூமியாக திகழ்ந்தது. அந்தக் கால கட்டத்தில் இசையின் சக்கரவத்தியாக திகழ்ந்தவர் காதர் பாட்சா ஆவார். இவருடைய இசையையும் பாடலையும் கேட்பதற்காகவே மக்கள் கூட்டம் கூடுவார்கள்.

காதர் பாட்சாவின் தெய்வீக இசையாலும் பாடல் பாடுவதாலும் நாடகக் கலை உயிர் அடைந்து வளர்ந்தது. அந்தக் காலத்தில் இசையின் சக்கரவர்த்தியாக திகழ்ந்தவர் காதர்பாட்சா ஆவார்.

**ஆர்மோனிய சக்கரவத்தி டி.எம்.காதர்பாட்சாவின் பாடல்கள்**




காதர் பாட்சாவின் பாடல்களில் தேச பக்தி அதிகம் இருக்கும். இஸ்லாமிய பாடல்களையும் பாடி இருக்கின்றார். தேச பக்தி பாடல்களையும் பாடி இருக்கின்றார். முருகனின் பக்தி பாடல்களையும் காதர் பாட்சா பாடி இருக்கின்றார்.

மதம் கடந்து மனித நேயராக தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர் ஆவார்.

தமிழ் கவிஞர்களை ஊக்கப்படுத்தி வளர்ந்தவர் பல கவிஞர்களுக்கு பாடலை எழுதிக் கொடுக்க சொல்லுவார். பாடல் எழுதி கொடுப்பவருக்கு அன்பு பரிசாக பணத்தை சன்மானமாகக் கொடுப்பார். ஒரு பாடலுக்கும் அந்தக் காலத்திலேயே 10 ரூபாய் அன்பு பரிசாக கவிஞருக்கு அளிப்பார். அந்த அளவிற்கு தமிழக் கவிஞர்களையும் இயல் இசை நாடகம் மூன்றையும் அழிய விடாமல் முழு மூச்சாக தன் வாழ்நாள் முழுவதும் தெய்வ தமிழ்ப் பணி செய்தவர் ஆவார்.

1930-ல் காதர் பாட்சா அவர்கள் பாடிய பாடல்களை எச்எம்வி இசைத் தட்டுகளாக வெளியிட்டிருக்கிறார்கள். 70 பாடல்கள் அதில் அடங்கும். அந்தக் காலத்தில் இவருடைய ஆர்மோனிய இசையும், பாடலும் இல்லாமல் எந்த நாடகமும் ஓடாது. அந்த அளவிற்கு தன்னுடைய உருகும் தெய்வீக பாடல்களால் மக்களின் உள்ளத்தை கவர்ந்து இருந்தார். அந்த காலத்தில்



முத்தமிழையும் வளர்த்த முழுப் பெருமையும் காதர் பாட்சாவையே சேரும்.

**சுதந்திர பாடல் பாடியதால் சிறை சென்றார்**

அவர் அந்தக் காலத்தில் நாட்டுப் பற்றுள்ளவராகவும் தமிழ் மொழிப் பற்றாளராகவும் வாழ்ந்தவர். அடிக்கடி காதர் பாட்சா அவர்கள் மேடை நாடகத்தில் தேச பற்றான பாடல்களையும் சுதந்திர போராட்ட பாடல்களையும் பாடி மக்களுக்கு தேசப் பற்றை ஊட்டினார். இதனால் பல முறை எச்சரித்த ஆங்கில அரசு இவரை கைது செய்து சிறையில் அடைத்தது. பின்பு 6 மாதம் சிறையில் இருந்து விடுதலை ஆனார். பல சுதந்திர போராட்ட ஆர்வலர்கள் இவருக்கான அபராத தொகையை செலுத்த முன் வந்தனர். அதை வேண்டும் என்று அன்போடு மறுத்துவிட்டு 6 மாத காலம் சிறைவாசம் அனுபவித்தார். பின்பு ஆங்கில அரசு விடுதலை செய்தது. பின்பு அவர் ஆன்மீக தெய்வீகப் பாடல்களையும் ஒற்றுமைப் பாடல்களையும் பாடினார்.

**கடைசி உருக்கமான முருகன் பாடல்**

ஆங்கில அரசு அவர் தேசப் பக்தியை மக்களுக்கு தன்னுடைய ஆர்மோனிய இசையாலும் பாடலாலும் புகுத்துவதை கண்காணித்து கொண்டே இருந்தது. பின்பு ஆங்கில அரசு காதர் பாட்சாவின் மேல் கொலைக் குற்ற வழக்கு பதிவு செய்தது. பல நாள் சிறையில் இருந்து வழக்கு தீர்ப்பளிக்கப்பட்டது. அவருக்கு ஆங்கில அரசு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட தேதியில் ஒரு குறிப்பிட்ட தேதியில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காதர் பாட்சாவுக்கு தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது.

**தூக்கு தண்டனையின் போது முருகனின் பாடல்**

தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்ட நாளும் நெருங்கி வந்தது. தான் நிரபராதி என்று இறைவனுக்குத் தெரியும் அதனால் மரணத்தை நினைத்து அவர் கலங்காமல் ஏற்றுக் கொண்டார்.

காதர் பாட்சாவை தூக்கில் போடும் முன் உன்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்டார்கள்? அதற்கு காதர் பாட்சா அவர்கள் நான் வாசிக்கும் ஆர்மோனிய இசைக் கருவியை வைத்து பாடல் பாட விரும்புகின்றேன் என்றார்.

காதர் பாட்சாவின் விருப்பப்படியே அவருக்கு ஆர்மோனிய இசைக் கருவி கொடுக்கப்பட்டது. நீதிபதிகளும் சிறை அதிகாரிகளும் அவர் படிக்கும் பாடலை கேட்கத் துவங்கினார்கள். அவர் கண்களை மூடி முருகப் பெருமானின் பாடலை மிகவும் மன உருக்கத்தோடு பாடத் துவங்கினார். அவரின் தெய்வீக ஆர்மோனிய இசையால் முருகப்பெருமான் மேல் உருக்கமான பக்தி பாடலைப் பாடினார்.

*சுருளி மலை மீதில் மேவும் சீல- உன்னை*
*தோத்தரிப்பேன் சுப்ரமணிய வேலா*

என்ற முருகப் பெருமானின் பாடலை தன் ஆர்மோனிய இசையால் உருக்கமுடன் பாடினார். அந்தப் பாடலை கேட்டு ஆங்கில அதிகாரிகள் அனைவரும் மெய் மறந்துவிட்டனர். தங்களை ஒரு தெய்வீக சக்தி ஆட்கொள்வதை உணர்ந்தனர். பாடல் முடியும் போது ஆங்கிலேயர்கள் கண் விழித்தினர்.

காதர் பாட்சாவை தூக்குப் போடும் நேரம் கடந்துவிட்டது. அந்தக் காலத்தில் அந்த நேரத்தில் தூக்கில் இடாவிட்டால் அந்த தூக்குத் தண்டனை ஒத்தி வைக்கப்படும். பின்பு தூக்குத் தண்டனை தள்ளி வைக்கப்பட்டது. பின்பு சில நாட்கள் விசாரணையில் அவர் குற்றம் செய்யவில்லை நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவர் செய்யாத குற்றத்தில் இருந்து தப்பித்தார். தெய்வீக ஆன்மீக வழியில் நீதியாக வாழ்ந்தவர்கள் என்றும் தோற்றதில்லை. மனித நேயத்திற்கு எடுத்துக் காட்டாக வாழந்தார். மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர் மத ஒற்றுமை வளர்த்தவர்.

**முருகன் கோவிலில் ஒலிக்கும் பாடல்**

ஆர்மோனிய சக்கரவத்தி டி.எம்.காதர் பாட்சா அவர்கள் பாடிய முருகனின் பாடல் இன்றும் பல முருகன் கோவில்களிலும் முருக பக்தர்களிடமும் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. முருகப் பெருமானின் ஆறுபடை வீட்டிற்கும் காவடி எடுத்துச் செல்லும் பக்தர்கள் காதர் பாட்சா அவர்கள் பாடிய பாடலை பாடிக் கொண்டே செல்வார்கள்.

காதர் பாட்சா அவர்கள் பாடிய முருகன் பாடல் இப்பொழுதும் கிராம கோவில்களில் கும்மிப் பாடலாகவும் காவிய சிந்து பாடலாகுவம் முருகப் பக்தர்களிடம் ஒலித்து கொண்டு இருக்கின்றது.

ஆர்மோனி சக்கரவர்த்தி உறையூர் டி.எம்.காதர் பாட்சாவின் மெய்ஞான இசையாலும் தன்னுடைய

உருக்கமான பாடலாலும் மனித நேயத்தையும் மத நல்லிணக்கத்தையும் உருவாக்கினார். அந்த வழியில் நல் அறங்களை கடைப்பிடித்து அனைவரும் ஒற்றுமையுடன் ஒரு தாய் பிள்ளைகளாக வாழ்வோம்.

**யாக்கோபு வைத்தியம் 300**

யாக்கோபு சித்தர் பாடல்கள்:

1. ஆரணத்து ளமர்ந்திடு சோதியை
தாரணத்துள் சதா தொழு தேத்தியே
காரணக் குரு வாகிய கர்த்தனைப்
பூரணத்திற் பொருந்தியே போற்றுவோம்
2. ஏகமான வெளிக்குள் வெளிய தாய்ப்
பாகமாக பரிந்திடு சோதியைத்
தாகமாகவே தான் தொழு தேத்தியே
யோகமாக வேயுள் நினைத்தோதுவாம்

**திருப்புகழ்: அருணகிரிநாதர்**

1. கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில் வந்தததுத கண்தகன் என்றிடு
கதிர் மிஞ்சிய செண்டைஎ றிந்திடு கதியோனே
கடமிஞ்சி அந்நதவி தம்புணர்
கவளந் தனை உண்டுவ ளர்ந்திடு
கரியின் றுணைஎன்று பிறந்திடு முருகோனே
2. பனகந்துயில் கின்றதி றம்புனை
கடல் முன்பு கடைந்தப ரம்பரர்
பலதுன்பம் உழன்றுக லங்கிய
சிறியன்புல யன் கொலையன்புரி
பவமின்றி கழிந்திட வந்தருள் புரிவாயே!

**ஆர்மோனிய சக்கரவர்த்தி டி.எம்.காரத் பாட்சா பாடிய முருகப் பெருமானின் பாடல்**

* சுருளிமலை மீதில் மேவும் சீலா - உன்னை
தோத்தரித்தேன் சுப்பிரமணிய வேலா - பசும்
தோகை மயிலே றிநிதம் வாகுடனே
எங்கள் வாரும் எங்கள் ஐயா முருகையா
* கண்ணியமுடனே பல நாளும் மச்ச
காவடிகள் சன்னதியில் சூழும்-அந்த
காட்சிதனை என்ன சொல்வேன்
மாட்சிமை விளங்குகின்ற கந்தா - சிவன் மைந்தா
* தீராத பிணியகற்றும் வேலா- உந்தன்
சித்துதனை என்ன சொல்லுவேன் பாலா - முன்னர்
தென் பொதிகை முனிவரையும்
அன்புடனே ஆதரித்த திருவே - வேத குருவே
* கணபதிக்கு இளையவனே வேலா - அந்த
காமாட்சி தமிழ் கூறு பாலா-ஒரு
கத்துப் பாடல் பாடி எந்தன்
சித்தமெல்லாம் வாடுகின்றேன் கந்தா - சிவன் மைந்தா
* தண்டாயுதா உன்னை கொண்டாடும்
தொண் டருக்காய் வா வா வா, அண்டங்காக்கும்
அனுகூலா ஆறுமுக வேலா-பழனிமலை ஐயா
உன்னை விடமாட்டேன் உத்தாரம் நான் கேட்டேன்
* நாதாய நாதா பழனிமலை நாதாய நாதா
நாராயணசாமி நம்பும் கந்தசாமி
நாதாயநாதா நாதாயநாதா... பழனி மலை
தண்டாயுதா உன்னை கொண்டாடும்
தொண்டருக்காய் வா வா வா...

**மாவட்ட காவல்துறையின் சார்பாக**

# கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்வு கூட்டம்



கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறையில் பொதுமக்கள் அளித்த புகார் மனுக்கள் மீது காவல்நிலையங்களில் முறையான தீர்வு மற்றும் மனுக்களின் மீதான நடவடிக்கைகளில் திருப்தி பெறாத மனுதாரர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ரஜத் சதுர்வேதி IPS, அவர்களின் தலைமையில் ஒவ்வொரு வார புதன்கிழமையும் மக்கள் குறை தீர்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

26.03.2025- ந் தேதி கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மக்கள் குறை தீர்வு கூட்டம் நடை பெற்றது, பொதுமக்கள் காவல் நிலையங்களில் அளித்த புகார் மனுக்களின் மீதான நடவடிக்கைகளில் திருப்தி பெறாத 42 மனுதாரர்களின் குறைகளை கேட்டறிந்து உரிய விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன், காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் மனுதாரர்கள் பலர் பங்கேற்றனர்.

நிருபர்: R.ராமநாதன், கள்ளக்குறிச்சி

# மதுரை மாநகர காவல்துறை சார்பாக ஆதரவற்றோருக்கு உதவும் காவல் கரங்கள்

## ஆணையர் J.லோகநாதன் IPS அவர்கள் துவக்கி வைத்தார்

மதுரை மாநகரில் உள்ள பொதுஇடங்களிலும், சாலை ஓரங்களிலும் உற்றார் உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வயதான ஆதரவற்ற முதியோர்களை கண்டறிந்து, அவர்களுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கி, இச்சமூகத்தில் தாங்களும் பாதுகாப்பான சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்த்தும் விதமாகவும், அவர்களுக்கு நிறைவான வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் அவர்களை காப்பகங்களிலும் அவர்களது உறவினர்களிடமும் ஒப்படைக்கும் பொருட்டு “காவல் கரங்கள்” என்ற புதிய திட்டத்தை மதுரை மாநகர காவல் ஆணையர் J.லோகநாதன் IPS அவர்கள் (26.03.2025) மதுரை மாநகர காவல் அலுவலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

மதுரை மாநகரில் 40 ஆதரவற்ற முதியோர் காப்பகங்கள் துணையுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கடந்த ஆண்டு முன்னோட்டமாக துவக்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தில், இதுவரை 38 ஆதரவற்ற முதியவர்கள் மீட்கப்பட்டு அதில் 24 பேர் காப்பகங்களிலும் 11 பேர் அவர்களது குடும்பத்தினரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.மேலும் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்த 3 முதியோர்களின் உடல்களை மீட்டு காவல் கரங்கள் அமைப்பின் மூலம் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதும்



கவனிக்கத்தக்க ஒன்று. மேலும் காவல் ஆணையர் அலுவலகத்தில் இதற்கென காவல் ஆய்வாளர் தலைமையில் செயல்பட்டு வரும் காவல் கரங்கள் அமைப்பிற்கு, ஆதரவற்ற முதியோர்களின் விபரங்களை இலவச தொலைபேசி எண்: 1800-8892-098, 6369860806 மற்றும் சமூக வலைதள முகவரிகளான, முகநூல்: Kaval Karangal (Madurai City), இன்ஸ்டாகிராம் Kaval Karangal (@ kavalka-rangal- maduraicity, டுவிட்டர், X- Kaval Karangal Maduri City (@ kavalkarangalMC) போன்றவற்றின் மூலம் பொதுமக்கள் தங்களுடைய தகவல்களை தெரிவிக்கலாம் என மதுரை மாநரக காவல்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை







### கொடைக்கானலில்

# விடுதி உரிமையாளரை எரித்து கொன்ற 4 பேர் கைது

## காவல்துறையினருக்கு DSP திருமதி.மதுமிதா அவர்கள் பாராட்டு


கொடைக்கானல் பெரும்பள்ளம், குருசடி மெத்து அருகே உள்ள தனியார் விடுதியில் மாத சம்பளம் குறைவாக கொடுக்கப்பட்டதாக ஏற்பட்ட தகராறில் விடுதியின் உரிமையாளரை அடித்து கொன்று உடலின் பாகங்களை வெட்டி கேம்ப் பயரில் விறகுடன் வைத்து எரித்தும், தலை மற்றும் மார்பு பகுதியை தூக்கி வீசி சென்ற வழக்கில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வில்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பெரும்பள்ளம் குருசடி மெத்து அருகே விடுதியின் உரிமையாளர் கொலை செய்யப்பட்டு இருப்பதாகவும், உடலில் உள்ள சில பாகங்களை எரித்தும்,மீதமுள்ள பாகங்களை தூக்கி வீசியதாக மதுரை காவல் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது, மேலும் இது சம்பந்தமாக மதுரை தத்னேரி பகுதியை சேர்ந்த மணிகண்டன்(29) என்ற இளைஞரை கைது செய்து இருந்தனர்.

மதுரை காவல் துறையினர் கொடுத்த தகவல் அடிப்படையில் கொடைக்கானல் காவல் துறையினர் பெரும்பள்ளம், குருசடி மெத்து அருகே உள்ள தனியார் விடுதியில் தீவிர சோதனை மேற்கொண்டனர். இதில் விடுதியின் ஒரு அறையில் இரத்த கறைகள் இருந்தது தெரியவந்தது, மேலும் இந்த விடுதியில் குளிர் காய்வதற்காக கேம்ப் பயர் அமைக்கப்பட்டிருந்த பகுதியில் 5 லிட்டர் வாட்டர் பாட்டிலில் பாமாயில் எண்ணெய், மற்றும் கேம்ப் பயர் அமைக்கும் இடத்தில் துணி,மற்றும் எலும்பு துண்டுகள் இருந்தது சோதனையில் கண்டறியப்பட்டது.

மேலும் உடல் பாகங்களை காவல் துறையினர் சுமார் 3 மணி நேரமாக போராடி தேடினர்,இருப்பினும் உடல் பகுதி கிடைக்காத சூழ்நிலையில் மதுரையில் கைது செய்து இருந்த மணிகண்டனை வாட்ஸ் அப் கால் மூலம் தொடர்பு கொண்டு உடல் பகுதி எங்கு வீசப்பட்டு உள்ளது என தகவல் கிடைக்கப்பெற்ற பிறகு தனியார் விடுதி வளாகம் அருகே உள்ள கட்டிடம் பகுதியில் எரிந்த நிலையில் தலை மற்றும் மார்பு பகுதி இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து தடய அறிவியல் ஆய்வக நிபுணர்






மற்றும் தடய அறிவியல் ஆய்வக ஆய்வாளர் உள்ளிட்டோர் சோதனை கொண்டு தடையங்களையும் சேகரித்தனர்.

இதனை தொடர்ந்து மீட்கப்பட்ட உடல் பாகங்களான கை, கால், முதுகு உள்ளிட்ட எலும்பு துண்டுகள் மற்றும் எரிந்த நிலையில் இருந்த தலை மற்றும் மார்பு பகுதியை உடற்கூறு ஆய்விற்காக திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரிக்கு கொண்டு சென்றனர். மேலும் இந்த விசாரணையை காவல் துறையினர் தீவிரப்படுத்தினர்.

இதில் கொடைக்கானல் காவல் துறையினர் மதுரை காவல் துறையினரால் கைது செய்து இருந்த மணி கண்டனை அழைத்து வந்து விசாரணை செய்யும் போது, மதுரை அருகே உள்ள மறு வாழ்வு மையத்தில் தான் சிகிச்சையில் இருந்ததாகவும், மேலும் தங்கும் விடுதியின் உரிமையாளரான கொடைக்கானல் நாயுடுபுரம் பகுதியை சேர்ந்த சிவராஜ்(61) என்பவரும் சிகிச்சையில் இருந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் சிவராஜை கடந்த ஒரு மாதங்களுக்கு முன்பு அவரது தாயார் மற்றும் சகோதரி மறு வாழ்வு

மையத்தில் இருந்து கொடைக்கானலுக்கு அழைத்து வந்துள்ளனர். அப்போது பெரும்பள்ளம், குருசடி மெத்து அருகே உள்ள அவருக்கு சொந்தமான தங்கும் விடுதியில் தங்கியுள்ளார். அங்கு சில நாட்களாக விடுதி செயல்படாமல் இருந்ததுள்ளது. இதனை நடத்துவதற்கு பணியாட்கள் தேவைப்பட்டதால் மறு வாழ்வு மையத்தில் சிகிச்சையில் இருந்த நண்பர்களை அவ்வப்போது விடுதிக்கு சிவராஜ் அழைத்தும் வந்துள்ளார்.



இந்த நிலையில் கடந்த 20-ஆம் தேதி சிவராஜ் மற்றும் இவரது மறு வாழ்வு மைய நண்பர்களான மதுரையை சேர்ந்த மணிகண்டன்(29) சிவகங்கையை சேர்ந்த சந்தோஸ்(20), அருண், ஜோசப் உள்ளிட்ட 5 நபர்களும் ஒன்றாக இணைந்து 25 குவாட்டர் பாட்டில்கள் வாங்கி கொண்டு வந்து அறையில் வைத்து மது அருந்தியுள்ளனர். அப்போது விடுதிக்கு வந்திருந்த மணிகண்டன் 3 நாட்களாக சமைத்துள்ளார்.

இந்நிலையில் தினந்தோறும் சம்பளம் எவ்வளவு ரூபாய் தர முடியும் என மறு வாழ்வு மைய இளைஞர்கள் சிவராஜிடம் கேட்டுள்ளனர். அப்போது 1,000 ரூபாய் தரமுடியும் என விடுதி உரிமையாளர் தெரிவித்ததற்கு 8 மணி நேரம் பணிபுரியும் கொத்தானரே 1,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறார், எங்களுக்கு 1,500 ரூபாய் சம்பளம் வேண்டும் என்றும், 3 நாட்கள் சமைத்ததற்கு சம்பளம் வேண்டும் என்றும் மணிகண்டன் கேட்டுள்ளார்,

இதனையடுத்து விடுதி உரிமையாளர் ஆபாச வார்த்தைகளால் பேசி இளைஞர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். வாக்குவாதம் ஒரு கட்டத்தில் முற்றி கைகலப்பாக மாறியுள்ளது.

இதில் மறு வாழ்வு மைய இளைஞர்களில் மணிகண்டன் கட்டையால் விடுதி உரிமையாளரான சிவராஜை பலமாக தாக்கியுள்ளார். இதில் சிவராஜ் உயிருக்கு போராடிய நிலையில், மீண்டும் உடன் இருந்த மறு வாழ்வு மைய இளைஞர்கள் அதிக போதையில் அங்கு விறகு வெட்ட வைத்திருந்த அரிவாள்களை கொண்டு கை, கால்கள், இடுப்பு பகுதிகள் அறுக்கப்பட்டு, அறையில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டு அறையின் அருகே உள்ள கேம்ப் பயர் அமைக்கும் இடத்தில் விறகுகளை கொண்டு தீ மூட்டியதுடன் வெட்டப்பட்ட கை, கால்களையும் எரித்துள்ளனர். அதிகாலையானதும் மதுபோதை குறைந்த பிறகு தலை மற்றும் மார்பு பகுதி பாதி எரிந்து, கருகிய நிலையில் காணப்பட்டதால் தனியார் விடுதி அருகே உள்ள கட்டிடத்தில் தூக்கி வீசியதாக காவல் துறையினர் விசாரணையில் தெரிவித்தனர்.

இதனையடுத்து புதன்கிழமை அன்று மணிகண்டன் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சிறையில் அடைத்தனர். மேலும் இவ்வழக்கில் தொடர்புள்ள சிவகங்கையை சேர்ந்த சந்தோஸை சிவகங்கையில் மருத்துவரிடம் சில்மிசம் செய்த வழக்கில் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

இவ்வழக்கில் தொடர்புள்ள மேலும் 2 பேரை காவல் துறையினர் தேடி வந்த நிலையில், கொடைக்கானல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அருண் ஆஜாராகியுள்ளார். மேலும் கொடைக்கானல் காவல் துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு மதுரை கூடல் நகர் பகுதியில் ஜோசப்பை கைது செய்து வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

விடுதியின் உரிமையாளர் சிவராஜை அவரது விடுதியிலேயே வைத்து கொலை செய்து எரித்த சம்பவம் கொடைக்கானல் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கைது செய்யப்பட்டுள்ள மணிகண்டன் மீது 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. விடுதியின் உரிமையாளரான சிவராஜை காணவில்லை என அவரது தங்கை கடந்த 23-ஆம் தேதி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின்பேரில் தீவிர விசாரணை மேற்கொண்டு கொலையாளிகளை அதிரடியாக கைது செய்த கொடைக்கனல் காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் தலைமையிலான காவல் குழுவினரை DSP திருமதி. மதுமிதா அவர்கள் பாராட்டினார்கள்.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்



செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (101) அதிகாரம்: இனியவை கூறல்

ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும், அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகயும் கொடுத்தாலும் சமம் ஆகாது.



## திருச்சி மாநகர காவல் ஆணையர் N.காமினி IPS தலைமையில்

# மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம்

## சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பணிப்பாராட்டு சான்றிதழ்

திருச்சி மாநகர காவல் அலுவலகத்தில் பிப்ரவரி – 2025 மாதத்திற்கான மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம் 22.03.2025 அன்று திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காவல் துணை ஆணையர்கள் திரு.P.சிபின் IPS (வடக்கு), திரு.T.ஈஸ்வரன் IPS (தெற்கு), காவல் உதவி ஆணையர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டார்கள்.

* அரசால் தடைசெய்யப்பட்ட லாட்டரி சீட்டு விற்பனை செய்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்தும், கஞ்சா மற்றும் புகையிலை பொருள்கள் விற்பனை ஏதும் நடைபெறா வண்ணம் தீவிரமாக கண்காணிப்பு செய்தும், சரித்திரபதிவேடு குற்றவாளிகள் மற்றும் கெட்ட நடத்தைக்காரர்களின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கவும்,

* பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்களில் ஈடுபடுவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும்,

* சாதி மற்றும் மதரீதியாக எழும் பிரச்சனைகளின் போது காவல் உயர் அதிகாரிகள் சம்பவ இடம் சென்று மோதல்களை தடுத்து உடனடியாக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும்,

* மேலும் காவல் நிலையங்களில் பதிவாகி நிலுவை யில் உள்ள வழக்குகளை விரைந்து விசாரணை முடித்து, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும்,

* காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும்,

* புகார் அளிக்கவரும் பொதுமக்களிடம் கனிவாக நடந்து கொண்டும், அவர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது காலம் தாழ்த்தாமல் முறையாக விசாரணை செய்தும், வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருந்தால் வழக்கு பதிவு செய்யவும், இல்லையேல் புகார் மனுவிற்கு மனு ரசீது வழங்கி விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் காவல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்களை கடத்தி வந்த நான்கு சக்கர வாகனம் மற்றும் குட்கா பொருட்களை பறிமுதல் செய்த அரியமங்கலம் காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரையும், ஆன்லைன் மூலம் லாட்டரி சீட்டு விற்பனை செய்தவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்ட உறையூர் காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரையும் நேரில் அழைத்து பணிப்பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

தலைமை நிருபர்: மு.பாண்டியராஜன், திருச்சி







# திருவள்ளூரில் பேருந்து மீது டிப்பர் லாரி மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழப்பு

## உடலை வாங்க மறுத்து போராடிய உறவினர்களிடம் சுமூகமாக பேசி தீர்வு கண்ட ADSP G.ஹறிகுமார் அவர்கள்

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அடுத்த மகான் காளிகாபுரத்தில் இருந்து திருத்தணி செல்லும் அரசு பேருந்து KG கண்டிகை மெயின் முக்கிய சாலையில் வந்து கொண்டிருந்தபோது, எதிரே அதிவேகமாக வந்த டிப்பர் லாரி நிலைதடுமாறி பேருந்து மீது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த அம்மையார் குப்பத்தைச் சேர்ந்த மகேஷ், முரளி, பாண்டுரங்கன், சிவானந்தம் ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



மேலும், ஒரு சிலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை சிகிச்சைக்காகவும், இறந்தவர்களை உடல் கூறாய்வுக்காக திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர்.

டிப்பர் லாரி ஓட்டுனரை கைது செய்ய கோரியும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நியாயம் கேட்டும் இறந்தவர்களின் உறவினர்கள் மருத்துவமனையில் இருந்து உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். திருத்தணி காவல் உதவி கண்காணிப்பாளர் மற்றும் திருத்தணி காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வரும் நிலையில், தகவல் அறிந்த காவல்துறை உயரதிகாரிகளின் உத்தரவின் பேரில் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் SP திரு.சீனிவாச பெருமாள் அவர்களின் மேற்பார்வை யில் திருவள்ளூர் மாவட்ட கூடுதல் காவல் கண் காணிப்பாளர் ADSP G.ஹறிக்குமார் அவர்கள் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று சம்பந்தபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து மறுநாள் இறந்தவர்களின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைத்து உடனிருந்து அமைதியான முறையில் இறுதி சடங்கு நடைபெற உறுதுணையாக இருந்துள்ளார். தக்க சமயத்தில் சாதுரியமாக செயல்பட்டு பிரச்சினையை அமைதியாக பேசி தீர்வு கண்ட மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ADSP G.ஹறிக்குமார் அவர்களுக்கும் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் தமிழக அரசுக்கும் அப்பகுதி மக்கள் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

நிருபர்: AR.முருகேசன், திருவள்ளூர்.





## ஹாகினி முத்திரை

சுண்டு விரலின் இரு கை விரல்களின் முனைகளை ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டிருக்க வேண்டும் இம்முத்திரை ஆறாவது சக்கரமாகிய ஆக்ஞை சக்கரத்தை திறக்கிறது. எனவே, மூளையை தூண்டிவிடுகிறது நினைவாற்றலை வளர்க்கிறது வலது மூளைக்கும் இடதுமூளைக்கும் உள்ள கூட்டுறவை மேம்படுத்துகிறது மனவலிமையே எனது வலிமை என்று சொல்லிக்கொண்டு தரையில் சம்மணங்காலிட்டு அமர்ந்து 10 நிமிடம்செய்தால் நல்லபலன்கிடைக்கும் **(இரண்டு கைகளிலும் செய்க...)**





## இப்போது புரிகிறதா?

# அமலாக்கத் துறை சோதனை ஏன்?

தமிழக அரசின் டாஸ்மாக் நிறுவனத்திற்கு 60 சதவீதத்திற்கு அதிகமான மது பாட்டில்களை சப்ளை செய்வது ஜெகத்ரட்சகன் அவர்களின் அக்வாட் டிஸ்லரி, ஜெய முருகனின் SNJ என்னும் நிறுவனம் மற்றும் KALS என்ற 3 நிறுவனங்களும் திமுகவின் உறுப்பினர்களின் நிறுவனங்கள்.

இந்த மூன்று நிறுவனங்களின் தலைமை அலுவலகம் மற்றும் இந்த மூன்று நிறுவனங்களிடம் இருந்து மதுபாட்டில்களை வாங்கும் தமிழக அரசின் டாஸ்மாக் மைய கருவூலத்தில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இந்த 3 நிறுவனங்களும் டாஸ்மாக் கருவூல கணக்கில் வராமல் தனியாகவே லேபிள் அடித்து மது கடைகளுக்கு சப்ளை செய்து கொண்டு வருகிறார்கள் என்பது கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் குற்றச்சாட்டு.

அதாவது இந்த 3 நிறுவனங்களிடமிருந்து ஒரு லட்சம் பாட்டில் வெளியே வருகிறது என்றால் அதில் 50 ஆயிரம் பாட்டில்கள் டாஸ்மாக் கருவூலத்தில் என்டர் செய்யப்பட்டு மது கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். மீதி 50,000 பாட்டில்கள் டாஸ்மார்க் பாட்டில்கள் போல ஸ்டிக்கர் எல்லாம் இருக்கும் ஆனால் டாஸ்மார்க் சிஸ்டம் கணக்கில் வராது நேரடியாக மது கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

உதாரணமாக 20 ரூபாய்க்கு ஒரு பாட்டிலை மது தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து டாஸ்மாக் நிறுவனம் வாங்கி, அதை 140 ரூபாய்க்கு விற்கும் போது இங்கு 120 ரூபாய் லாபம் டாஸ்மார்க் நிறுவனத்திற்கு அதாவது அரசாங்கத்துக்கு கிடைக்கிறது.

அதே பாட்டிலை 20 ரூபாய்க்கு அந்த மது தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து வாங்கி டாஸ்மாக் டேட்டா பேஸில் ஏற்றாமல் டாஸ்மாக் கடைகளில் வைத்து விற்கும் போது 120 ரூபாய் லாபம் கிடைக்கிறது.

இப்போது இந்த லாபம் அரசாங்கத்திற்கு போகாது. டாஸ்மாக் கருவூல கணக்கில் வராத பாட்டில் என்பதால் இவர்களே இந்த பணத்தை எடுத்துவிடுவார்கள். இது டாஸ்மாக் கடையில் வேலை செய்பவர்களுக்கு புரியாது டாஸ்மாக் மதுவை அனுப்பும் அரசு கருவூலத்திற்கும் மது தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான கள்ள ஒப்பந்தம்.

அப்படி என்றால் கிட்டத்தட்ட டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு என்ன வருமானம் கிடைக்கிறதோ அதே வருமானம் இவர்களுக்கும் கிடைத்திருக்கிறது என்பதுதான் இதில் இருக்கும் பொருள்.

டாஸ்மாக் ஆண்டுக்கு ரூ.50,000 கோடி லாபம் ஈட்டுகிறது. இதே அளவு லாபத்தை செந்தில் பாலாஜியும் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்பதுதான் இதில் இருக்கும் சிறப்பு.

செந்தில்பாலாஜி இந்த 3 மது தயாரிப்பு நிறுவனங்களோடு சேர்ந்து ஏமாற்றிய பணத்தை முறைகேடாக சட்டவிரோத பரிமாற்றம் செய்து அதை தேர்தல் செலவுக்காகவும் மற்ற செலவுகளுக்காகவும் தவறாக பயன்படுத்தி இருக்கிறார் என்பதை அமலாக்கத் துறையினர் கண்டுபிடித்து இந்த சோதனையை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது புரிகிறதா டாஸ்மாக்கில் விற்கப்படும் மதுவுக்கு பில் கொடுங்கள் அல்லது ஒரு பார்கோடு சிஸ்டம் மூலம் பாட்டில்களை ஸ்கேன் செய்து விற்பனை செய்யுங்கள் என்று நீதிமன்றம் 56 முறை சொன்ன பிறகும் டைம்பாஸ் செய்து கொண்டிருந்தார்கள் என்பது எதற்கென்று.

அப்படி ஒரு சிஸ்டத்தை கொண்டு வந்தால் எல்லாமே வெளிப்படைத்தன்மையாக நடக்க வேண்டி இருக்கும் இவர்களுக்கு போகும் இந்த பணம் போகாமல் நின்று விடும் என்பதற்காக பழைய மன்னர் காலத்து கணக்கு வழக்கு முறையை கையாண்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.



## பசி போக்கும் தளம் தென்பொதிகை டிரஸ்ட் மூலம்

# தென்காசி அரசு மருத்துவமனையில் அமாவாசை அன்னதானம்

பசி போக்கும் தளம் தென்பொதிகை டிரஸ்ட், இலஞ்சி மூலம் இயன்றதை செய்வோம் இல்லாதவர்களுக்கு என்ற தாரக மந்திரத்துடன் பயணிக்கும் இந்த அறக்கட்டளையானது ஒவ்வொரு மாத அமாவாசைக்கும் தென்காசி அரசு மருத்துவமனையில் அன்னதானம் வழங்கி வருகிறார்கள்.

இந்த பங்குனி மாத அமாவாசை அன்னதானம் தென்காசி அரசு மருத்துவமனையில் 29.3.25 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த அன்னதானத்தில் கர்ப்பிணி தாய்மார்கள், வயோதிக முதியவர்கள், நோயாளிகள், கைக்குழந்தையுடன் வந்த தாய்மார்கள் என மொத்தம் 700-க்கும் மேற்பட்டோர் பசியாறினார்கள்.

இந்த அமைப்பு ஆனது கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு தர்ம சிந்தனை உள்ள நல்லுள்ளங்களை ஒருங்கிணைத்து அதன் மூலம் பெறப்படும் நிதி உதவியில் தொடர் அன்னதானத்தை மேற்கொண்டு வருகிறது.

மேலும் தமிழ்நாடு முழுவதும் எண்ணற்ற ஆசிரமங்களில் உள்ள வயோதிக முதியவர்கள், ஆதரவற்ற சிறார்கள், கண் பார்வை குறைபாடுடையோர், மாற்று திறனாளிகள், மனவளர்ச்சி குன்றியோர்கள், முதுகு தண்டு வடம் பாதிக்கபட்டோர்களுக்கும் கடந்த 5 ஆண்டுகளாக சுழற்சி முறையில் அன்னதானம் வழங்கி வருகிறார்கள்.

2025ம் ஆண்டு முதல் தென்காசி மாவட்டத்தில் அனாதை பிணங்களை உரிய வழிமுறைகள் மூலம் முறையான காவல்துறை வழிகாட்டுதல் படி நல்லடக்கம் செய்து வருகிறார்கள். 29.3.25 அன்று நடைபெற்ற அன்னதானத்தில் தலைமை ஒருங்கிணைப்பாளர் மாரியப்பன் கூட்டுறவு சார்பதிவாளர், கோபிநாத் துணைப்பதிவாளர், சென்னை ராஜலிங்கம், ஏரல் ஐயப்பன், குற்றாலம் வீரமணி, குடிசை மாற்று அதிகாரி குமரன், ரத்தினவேல், அரசு பள்ளி ஆசிரியர் பாரதி, குற்றாலம் மணி, மாரியப்பன், வள்ளலார் சன்மார்க்க ராஜ், இந்திராகாந்தி, கனி, லெட்சுமி, முத்து ஆகியோர் கலந்து கொண்டு அன்னதானத்தை வழங்கினார்கள். தென்காசி பொறுப்பாளர் அண்ணாமலை கலந்து கொண்டவர்களுக்கு நன்றி கூறினார்.




நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.



## கல்வி உதவி தொகை

விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உயர்கல்வி பயிலும் காவல் துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித்தொகை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன் IPS அவர்கள் மாவட்ட காவல் அலுவலகத்தில் வழங்கினார். இதில் 45 மாணவ, மாணவியர்களுக்கு இந்த ஆண்டுக்கான கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது. கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு ரூபாய் 13,000/-மும், பொறியியல் படிப்புகளுக்கு ரூபாய் 20,000/-மும் மருத்துவ படிப்புக்கு ரூபாய் 25,000/- என மொத்தம் 8 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.

நிருபர்: R.ராமநாதன், விழுப்புரம்

# பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றதடுப்பு பயிற்சி முகாம்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை கையாள பெண் காவல் புலன் விசாரணை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கான ஐந்தாம் கட்டம் திறன் மேம்பாட்டு பயிற்சி திருச்சி காவல்துறை பணியிடை பயிற்சி மையத்தில் துணை காவல் கண்காணிப்பாளர் சுதர்சன் தலைமையில் 24.03.25 நடைபெற்றது.

மாவட்ட குழந்தை நலக்குழு உறுப்பினர் முனைவர் பிரபு இளஞ்சிறார் நீதி சட்டம் 2015 பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012 குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009 ஆகிய சட்டங்களின் முக்கிய பிரிவுகள் குழந்தை நலக்குழு இளஞ்சிறார் நீதிக் குழுமம் மற்றும் குழந்தைகள் உதவி மையம் செயல்பாடுகள் பணிகள் நடைமுறைகள் குறித்தும் ஆண்டிற்கு ஆறு முறை நடக்கும் கிராம சபைக் கூட்டங்களான ஜனவரி 26, மார்ச் 22, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2, நவம்பர் 1 ஆகிய நாட்களிலும் கிராம வட்டார மாவட்ட பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி மண்டல வார்டு அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் காலாண்டிற்கு ஒரு முறையும், பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் மாதம் தோறும் நடைபெறும்.

அந்த நாளில் காவலர்களின் பங்கேற்பு குறித்தும் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் விவரம் இலவச தொலைபேசி எண்களான குழந்தை உதவி மையம் 1098, பெண்கள் உதவிமையம் 181, மூத்தகுடி மக்கள் உதவிமையம் 14567, பள்ளி மாணவர்களுக்கான உதவி மையம் 14417, இணைய வழி குற்றம் 1930, போதை சிகிச்சை மீட்பு மறுவாழ்வு மற்றும் மனநலம் சார்ந்து 14416 குறித்து பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் 95 க்கும் மேற்பட்ட திருச்சி மற்றும் மாநகரம், கரூர் பெரம்பலூர் புதுக்கோட்டை அரியலூர் மற்றும் இரயில்வே காவல் ஆளிநர்கள் கலந்துக் கொண்டனர்.

சிறப்பு நிருபர்: S.மணிகண்டன், திருச்சி





# ரயில் பெட்டிகளில் நீலம், சிவப்பு ஏன்?

இந்தியாவில் ரயில் பயண சேவை தொடங்கப்பட்டு 170 வருடங்களைத் தாண்டியும் கூட இன்றளவும் பெரும்பாலானவர்களின் முதல் தேர்வாக இது உள்ளது. சொகுசு கார்களை விட நீண்ட தூர பயணத்திற்கு சிறந்ததாக ரயில் பயணத்தை பலரும் கருதுகின்றனர். நீண்ட தூரம் அசதி இல்லாமல் பயணம் செய்வதற்கு ரயிலை விட ஏற்றது வேறு எதுவும் இல்லை. ரயிலின் சிறப்பு வகுப்புகள் மிகவும் சொகுசாகவும் பயணக் களைப்பு இல்லாமலும் சிறப்பான அனுபவத்தைத் தருகிறது.

நாம் ரயில் நிலையங்களில் நீல நிறத்தில் சில ரயில்களையும் சிவப்பு நிறத்தில் சில ரயில்களையும் பார்த்திருப்போம். பெரும்பாலானவர்கள் இந்த வண்ணங்கள் ரயிலின் அழகுக்காகவும், தோற்றத்திற்காகவும் பூசப்பட்டுள்ளதாக நினைத்திருப்பார்கள். இந்த வண்ணங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன. ஒவ்வொரு வண்ணத்திற்கும் ரயில் உருவாக்கத்தில் தனி வரலாறு உண்டு. அதேபோல், ரயில் பெட்டிகள் இரண்டு வகைகளில் தயாரிக்கப்படுகின்றன.

### நீல நிறப் பெட்டிகள் ICF

சிவப்பு மற்றும் நீல வண்ண ரயில் பெட்டிகள் தயாரிக்கும் இடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. நீல நிறத்தில் இருக்கும் ரயில் பெட்டிகள் தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த கோச் தொழிற்சாலையில் (ICF) தயாரிக்கப்படுகின்றன.

1952-ல் நாட்டிற்கு விடுதலை கிடைத்த பின்னர் இந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அதன்பிறகு, இங்கு ரயில் பெட்டிகள் தயாரிக்கப் படுகின்றன. இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நீல நிறப் பெட்டிகள் அனைத்தும் இரும்பினால் செய்யப்பட்டவை. இந்த ரயில் பெட்டிகளில் ஏர் பிரேக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ரயில் பெட்டிகளின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட சராசரி வேகம் மணிக்கு 110 கி.மீ. மட்டுமே.

நீல நிறப் பெட்டிகளில் படுக்கை வகுப்பில் 72 இருக்கைகளும் குளிர்சாதன 3ம் வகுப்பில் 64 இருக்கைகளும் உள்ளவாறு தயாரிக்கப்பட்டது. இந்தப் பெட்டிகளில் உள்ள பொருட்களை 18 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றியமைக்க வேண்டும். இந்த காரணத்திற்காக, இந்தப் பெட்டியின் பராமரிப்பு செலவு அதிகமாக உள்ளது. இந்தப் பெட்டிகள் டூயல் பஃபர் சிஸ்டம் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதால், விபத்து ஏற்படும்போது, பெட்டிகளில் ஒன்றின் மேல் ஒன்றாக ஏறும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக விபத்தின் இழப்புகள் அதிகமாக இருக்கும்.

### சிவப்பு நிற ரயில் பெட்டி (லிங்க் ஹாஃப்மேன் புஷ் LHB)

சிவப்பு நிற ரயில் பெட்டி தொழில்நுட்பம் ஜெர்மனியில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கபுர்தலாவில் சிவப்பு நிற ரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது.

இந்த வகைப் பெட்டிகள் துருப்பிடிக்காத எஃகுவால் உருவாக்கப்படுகின்றன. மேலும். டிஸ்க் பிரேக்குகள் இதில் பயன்படுத்தப்படுகின்றன.

சிவப்பு நிறப் பெட்டிகளை 24 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றியமைக்க வேண்டும். இதனால் நீல நிறப் பெட்டிகளை விட, இவற்றின் பராமரிப்பு செலவு குறைவாக உள்ளது. இந்தப் பெட்டிகளின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட வேகம் மணிக்கு 200 கி.மீ. ஆகும். இந்தப் பெட்டியின் படுக்கை வகுப்பில் 80 இருக்கைகளும், குளிர்சாதன 3ம் வகுப்பில் 72 இருக்கைகள் உள்ளன. பராமரிப்பு செலவும் குறைவு, பாதுகாப்பும் அதிகம்.

# அதிர்ஷ்டமும், லாபமும் சேர உள்ள 5 ராசிகள்

ஏப்ரல் மாத ராசி பலன் 2025

ஏப்ரல் மாதத்தில் செவ்வாய், புதன், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரக பெயர்ச்சிகள் மற்றும் கிரகங்களின் சேர்க்கைகளால் கடகம், துலாம் உள்ளிட்ட 5 ராசிகளின் வாழ்க்கையில் அதிர்ஷ்டம் பிரகாசிக்கக்கூடியதாகவும். செல்வம் திடீரென அதிகரிக்கக்கூடியதாக இருக்கும்.

ஏப்ரல் மாதம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதவது சனி பெயர்ச்சி மீனத்தில் நடந்துள்ளதோடு, இந்த மாதத்தில் செவ்வாய், புதன், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்களின் பெயர்ச்சிகள் நடக்க உள்ளன. அதோடு சூரியன் மேஷ ராசியில் பெயர்ச்சி ஆகக்கூடிய நிலையில் சித்திரை மாதமும், தமிழ் புத்தாண்டும் தொடங்க உள்ளது. இதன் காரணமாக ஏப்ரல் மாதத்தில் செல்வம், பதவி உயர்வு என பல விதத்தில் அதிர்ஷ்ட பலன்கள் கிடைக்கும்.

## ரிஷபம் மாத அதிர்ஷ்ட ராசி பலன்

ஏப்ரல் மாதத்தில் ரிஷப ராசிக்காரர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். இந்த மாதத்தில் ராசி நாதன் சுக்கிரன் மீன ராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். இதனால் உங்களுக்கு வருமான உயர்வைப் பெறுவதற்கான நல்ல வாய்ப்புகளைத் தர வாய்ப்புள்ளது. உங்கள் வேலைகளை செய்து முடிக்க கடின உழைப்பு தேவைப்படும். அந்த முயற்சிக்கான பலனை நிச்சயமாக பெறுவீர்கள். இந்த நேரத்தில் உங்கள் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் அதை கட்டுப்படுத்துவது நல்லது. உங்கள் செலவை சுப காரியங்களில் செய்வது நல்லது. சம்பாதிப்பதற்கான பல வாய்ப்புகள் கிடைக்கும்.

## கடக இராசி அதிர்ஷ்ட ராசி பலன்

ஏப்ரல் மாதத்தில் கடக ராசிக்கு அதிர்ஷ்டம் நிறைந்ததாக இருக்கும். மாத தொடக்கத்தில் உத்தியோகஸ்தர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். வணிக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல லாபம் பெறலாம். உங்கள் செலவுகள் வருமானத்தை விட அதிகமாக இருக்கும் என்றாலும் அதை சமாளிக்க முடியும்.

செல்வாக்குமிக்க நபர்கள், நண்பர்களின் ஆதரவால் எதிர்பார்த்த விஷயங்களைச் செய்து முடிக்க முடியும். எதிர்கால திட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். இது எதிர்காலத்தில் எதிர்பார்த்த வகையில் நிறைய நன்மைகளைத் தரும். அரசியல் தொடர்புடையவர்களுக்கு விரும்பிய பதவி உயர்வு, பொறுப்புகள் கிடைக்கும். தேர்வு, விளையாட்டு போட்டிகளுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு வெற்றி கிடைக்கும். காதல் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

## துலாம் மாத அதிர்ஷ்ட ராசி பலன்

துலாம் ராசியை சேர்ந்தவர்களுக்கு, ராசி நாதன் சுக்கிரன் 6ம் வீடான நோய், எதிரி ஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். இந்த மாதத்தில் உங்கள் வாழ்க்கையில் வெற்றியும், முன்னேற்றமும், நிதி ஆதாயங்களும் அதிகம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். உங்கள் குடும்ப பிரச்சினைகளிலிருந்து விடுபடவும், நிவாரணம் பெறவும் முடியும். வேலை செய்பவர்களுக்கு பதி சம்பள உயர்வு எதிர்பார்க்கலாம். இந்த மாதத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி, செழிப்பு அதிகரிக்கும். ஏற்ற, தாழ்வுகள் இருந்தாலும் வணிகத்தில் லாபத்தைப் பெறலாம். உங்கள் வருமானத்தை உணர்ந்து செலவிடவும். உங்களின் மதிப்பு,மரியாதை அதிகரிக்கும்.

## மகரம் ஏப்ரல் மாத ராசி பலன்

மகர ராசியை சேர்ந்தவர்களுக்கு இந்த மாதம் சனி தாக்கத்திலிருந்து விடுபட உள்ளார்கள். ஏழரை சனில் இருந்து விடுபடக்கூடிய உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். பல விதத்தில் பண ஆதாயங்கள், முன்னேற்றத்திற்கான பல நல்ல வாய்ப்புகளும் கிடைக்கும். இந்த மாதம் உங்களுக்கு பல சாதகமான பலன்கள் தரும். நீண்ட காலமாக காத்திருந்த அனைத்தையும் பெறுவீர்கள். ஆடம்பரப் பொருட்கள் வாங்குதல், விருப்பங்களை நிறைவேற்றுதல் என அதிக பணம் செலவிட வாய்ப்புள்ளது. இந்த மாதத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

## மீனம் ஏப்ரல் மாத ராசி பலன்

மீன ராசியை சேர்ந்தவர்களுக்கு இந்த மாதம் ஏழரை சனி தொடங்குகிறது. இருப்பினும் இந்த மாதத்தில் நடக்கக்கூடிய சில கிரக சூழ்நிலை காரணமாக சில நல்ல மாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்கும். குறிப்பாக இந்த மாதத்தில் சுக்கிரன் மீன ராசியில் உச்சம் அடைகிறார். சூரியனும் புதனும் சேர்ந்து புதாதித்ய ராஜயோகத்தை உருவாக்குகின்றனர். இது போன்ற சூழலில் மீன ராசிக்கு தொழில், குடும்பம் மற்றும் ஆரோக்கியத்திற்கு ஆதரவுமான சூழல் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்குக் கடின உழைப்பிற்கு ஏற்ற மரியாதை கிடைக்கும். உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.




**மேஷ ராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதத்தின் தொடக்கம் கொஞ்சம் கடினமாக இருக்கும். திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். உங்கள் துணை உங்களுக்கு ஆதரவளிப்பார். இருப்பினும், காதல் வாழ்க்கையில் பதற்றம் அதிகரிக்கக்கூடும். நீண்ட பயணத்திற்கான வாய்ப்புகளும் உள்ளன.

வீட்டிற்கு சில விருந்தினர்கள் வரலாம். செலவுகள் குறித்து நீங்கள் மன அழுத்தத்திற்கு ஆளாக நேரிடும், இது உங்கள் ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம். உங்கள் உடல்நலத்தை நீங்கள் கவனித்துக் கொண்டால் மட்டுமே எல்லாம் சரியாகிவிடும்.

**வணங்க வேண்டியதெய்வம்:**
திங்கள்கிழமை பைரவர் வழிபாடு.
**ஸ்லோகம்:** பைரவர் அஷ்டகம்
**பரிகாரம்:** வெள்ளிக் கிழமை தோறும் பைரவருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.
**சந்திராஷ்டட்டம்:** பங்குனி 22-ம் தேதி 05/04/2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.14 மணி முதல் பங்குனி மாதம் 25-ம் தேதி 08/04/2025 புதன்கிழமை அதிகாலை மணி 4.55 வரை

---




**ரிஷப இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு சுமாராக இருக்கும். காதல் விஷயங்களில் பிரச்சினைகள் இருக்கும். திரு மணமான தம்பதிகள் ஒன்றாக நேரத்தை செலவிட வாய்ப்பைப் பெறுவார்கள். வெளிநாடு செல்பவர்கள் சில பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். இம்மாதத்தில் பெரிய திட்டங்களைச் செய்ய வேண்டாம். பணிபுரிபவர்கள் அலுவலகத்தில் கடினமாக உழைப்பீர்கள். மேலும் அந்த கடின உழைப்புக்கு ஈடாக, உங்களுக்கு நல்ல அங்கீகாரமும் கிடைக்கும். வியாபாரிகள் சற்று எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். தொழிலில் சிக்கல்கள் இருக்கலாம். உங்கள் தொழில் கூட்டாளியுடன் சண்டைவரலாம். இந்த மாதம் உங்கள் வங்கிக் கடனை வெற்றிகரமாக திருப்பிச் செலுத்துவீர்கள். பங்குச் சந்தையில் முதலீடு செய்வது ஓரளவு லாபத்தைத் தரும். மாணவர்கள் படிப்பில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சிறந்த பலன்களைப் பெற விரும்பினால், ஒரு நல்ல ஆசிரியரின் வழிகாட்டுதலைப் பெற வேண்டும். ஆரோக்கியம் மோசமடைய வாய்ப்புள்ளது. எனவே நீங்கள் உங்கள் உடல்நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டும்.

**வணங்க வேண்டியதெய்வம்:** செவ்வாய்க்கிழமை முருகன் வழிபாடு, **ஸ்லோகம்:** புதன் காயத்ரி,
**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை லஷ்மிக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.
**சந்திராஷ்ட்டமம்:** பங்குனி 25-ம் தேதி 8/04/2025 புதன்கிழமை அதிகாலை 4.56மணி முதல் பங்குனி 27-ம் தேதி 10/04/2025 வெள்ளிக்கிழமை மாலை மணி 3.58 வரை

---




**மிதுன இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். திருமணமானவர்கள் துணையுடன் நீண்ட பயணம் மேற்கொள்ளலாம். நிதி ரீதியாக நன்றாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சில புதிய வேலைகளைத் தொடங்கலாம். வியாபாரம் செய்பவர்களுக்கு இந்த மாதம் மிகவும் வெற்றிகரமாக இருக்கும். உங்கள் தொழிலில் நல்ல லாபம் ஈட்டுவீர்கள், மேலும் சில புதிய முதலீடுகளைச் செய்வதன் மூலம் உங்கள் தொழிலை முன்னோக்கி எடுத்துச் செல்லும் வாய்ப்பையும் பெறுவீர்கள். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் இன்னும் அதிக நன்மைகளைப் பெறலாம். பணிபுரிபவர்கள் தங்கள் வேலையில் பலம் பெறுவார்கள். இந்த மாதம் நல்ல பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவரும். மாணவர்களுக்கு இம்மாதம் நன்றாக இருக்கும். மாதத்தின் இரண்டாம் பாதி உங்களுக்கு சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, மன அழுத்தம் காரணமாக உடல்நலம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்:** குலதெய்வம்,
**ஸ்லோகம்:** பைரவர் அஷ்ட்டோத்தரம், **பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமைதோறும் பைரவருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.
**சந்திராஷ்டமம்:** பங்குனி மாதம் 27ம் தேதி 10/04/2025 வெள்ளிக்கிழமை மாலை 3.59 மணி முதல் 29ம் தேதி 12/04/2025 ஞாயிற்றுக்கிழமை இரவு 1.05 மணி வரை

---




**கடக இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு மிகப்பெரிய வெற்றியைத் தரும். வாழ்க்கைத் துணையுடனான உறவுகள் மோசமடையக்கூடும், சண்டைகள் ஏற்படக்கூடும் என்பதால், திருமணமானவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையை கவனித்துக் கொள்ள வேண்டும். உங்கள் தொழில் வாழ்க்கை நல்ல நிலையில் இருக்கும்.

பணிபுரிபவர்களுக்கு உடன் வேலை செய்வோரின் உதவி கிடைக்கும். அவர்களின் உதவியுடன், நீங்கள் உங்கள் வேலையை சரியான நேரத்தில் முடித்து வெற்றி பெறுவீர்கள். வியாபாரிகள் புதிய ஒப்பந்தங்களை பெறுவார்கள்.

புதிய வேலைகளைத் தொடங்குவதிலும் வெற்றி பெறலாம். நிதி விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். முதலீடு செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும். மாணவர்களுக்கு நன்றாக இருக்கும். உங்கள் கடின உழைப்பு உங்களுக்கு வெற்றியைத் தரும்..

**வணங்க வேண்டியதெய்வம்:**
வியாழக்கிழமைதோறும் குரு வழிபாடு,
**ஸ்லோகம்:** குரு காயத்திரி,
**பரிகாரம்:** வியாழக்கிழமை தோறும் குருபகவானுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.
**சந்திராஷ்டமம்:** பங்குனி மாதம் 29ம் தேதி 12/04/2025 ஞாயிற்றுக்கிழமை இரவு 1.06 மணி முதல் சித்திரை மாதம் 2ம் தேதி 15/04/2025 புதன்கிழமை காலை மணி 7.41 வரை




**சிம்ம இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் உங்களுக்கு சில நல்ல செய்திகள் கிடைக்கக்கூடும். காதல் வாழ்க்கையைப் பொறுத்தவரை, உங்கள் அன்புக்குரியவருடனான உங்கள் உறவு மேம்படும். நீங்கள் ஒருவருக்கொருவர் அதிக நேரம் கொடுப்பீர்கள், இது உங்கள் உறவை வலுப்படுத்தும்.பணிபுரிபவர்கள் பதவி உயர்வைப் பெறலாம். மேலும் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த மாதம் தொழில் செய்பவர்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்களுக்கு நெருக்கமான ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும். மாணவர்கள் தங்கள் கடின உழைப்பின் பலனைப் பெறுவார்கள்.

**வணங்க வேண்டியதெய்வம்:** வியாழக்கிழமை தோறும் முருகனைபகவானை வழிபாடு உங்களுக்கு நன்மையை தரும்.

**ஸ்லோகம்:** வியாழன் காயத்திரி சொல்லுதல்

**பரிகாரம்:** வியாழக்கிழமை தோறும் குரு பகவானுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.

**சந்திராஷ்டமம்:** சித்திரை 11-ம் தேதி 24/04/2025 வியாழக்கிழமை இரவு 12.00.மணி முதல் சித்திரை B-ம் தேதி 26/04/2025 சனிக்கிழமை இரவு மணி 2.40 வரை.

---




**கன்னி இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு வெற்றிகரமான மாதமாக இருக்கும். திருமணமானவர்களின் இல்லற வாழ்க்கை மேம்படும். வேலையில் இருப்பவர்கள் தங்கள் வேலையில் வெற்றி பெறுவார்கள். செயல்திறன் சிறப்பாக இருக்கும், இதன் காரணமாக உங்கள் உயர் அதிகாரியின் முழு ஆதரவைப் பெறுவீர்கள். மேலும் உங்களுக்கு பதவி உயர்வும் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வணிகம் செய்பவர்கள் தங்கள் தொழிலில் ஒரு நிபுணரைச் சேர்ப்பதன் மூலம் பெரிதும் பயனடைவார்கள். இதன் மூலம், நீங்கள் தொழிலில் நல்ல லாபத்தைப் பெறலாம். திடீரென்று உங்களுக்கு சில நன்மைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பங்குச் சந்தையில் முதலீடு செய்தால், இந்த மாதம் உங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். மாணவர்களுக்கு இம்மாதம் நன்றாக இருக்கும். படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்:** புதன்கிழமை தோறும் விநாயகர்

**ஸ்லோகம்:** புதன் காயத்ரி, பரிகாரம்: புதன்கிழமை தோறும் விநாயகருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.

**சந்திராஷ்டமம்: சித்**திரை 13-ம் தேதி 26/04/2025 சனிக்கிழமை இரவு 2.41 மணி முதல் சித்திரை 16-ம் தேதி 29/04/2025 செவ்வாய்க்கிழமை அதிகாலை மணி 4.58 வரை

---




**துலாம் இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். திருமணமானவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். நீங்கள் செய்யும் எந்த வேலையிலும் உங்கள் துணைவி உங்களுடன் நிற்பார். நிதி நிலைமை நன்றாக இருக்கும், உங்கள் வருமானம் அதிகரிக்கும்.

புதிய பொருட்களை வாங்குவதிலும் முதலீடு செய்வதிலும் நீங்கள் வெற்றி பெறலாம். இருப்பினும், உங்கள் நிதி நிலையை மேலும் மேம்படுத்த, நீங்கள் சில புதிய வழிகளைப் பின்பற்ற வேண்டும். வேலையில் இருப்பவர்கள் தங்கள் வேலையைச் சிறப்பாகச் செய்து வெற்றி பெறுவார்கள். வியாபாரம் செய்பவர்கள் நல்ல லாபத்தை பெறலாம். மாணவர்களுக்கு சவால்கள் நிறைந்ததாக இருக்கும். உங்கள் உடல்நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கும், ஏனென்றால் நோய்வாய்ப்பட வாய்ப்பு உள்ளது.

**வேண்டியதெய்வம்:** லெஷ்மி வழிபாடு,

**ஸ்லோகம்:** லெஷ்மி காயத்ரி, **பரிகாரம்:** ஞாயிற்றுகிழமை தோறும் லெஷ்மிக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.

**சந்திராஷ்டமம்:** சித்திரை மாதம் 16-ம் தேதி 29/04/2025 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.59 மணி முதல் சித்திரை மாதம் 18ம் தேதி 01/05/2025 வியாழக்கிழமை மாலை மணி 756. வரை

---




**விருச்சிக இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் நல்ல மாதமாக இருக்கும். திருமணமானவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் மன அழுத்தத்தை உணருவார்கள். காதல் வாழ்க்கைக்கு நன்றாக இருக்கும். உங்கள் உறவை முன்னோக்கி எடுத்துச் செல்ல முயற்சிப்பீர்கள் மற்றும் அதில் நீங்கள் வெற்றியும் பெறுவீர்கள். திடீரென்று உங்களுக்கு சில நல்ல செய்திகள் கிடைக்கக்கூடும். திடீர் வருமானம் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது.

பணிபுரிபவர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல்திறனும் மேம்படும், இது வேலையில் உங்கள் நிலையை மேம்படுத்தும்.

வியாபாரம் செய்பவர்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். உங்கள் மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் தொழிலில் முழு உற்சாகத்துடன் முன்னேறுவீர்கள். இம்மாதம் உங்கள் உடல்நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டும்.

**வணங்க வேண்டியதெய்வம்:** சனிக்கிழமை தோறும் பெருமாளை வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.

**ஸ்லோகம்:** சனி காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.

**பரிகாரம்:** சனிக்கிழமைதோறும் சனிஸ்வரருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.

**சந்திராஷ்டமம்:** சித்திரை மாதம் 18ம் தேதி 01/05/2025 வியாழக்கிழமை காலை 7.57 மணி முதல் சித்திரை மாதம் 20ம் தேதி 03/05/2025 சனிக்கிழமை பகல் மணி 12.20 வரை




**தனுசு இராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு கலவையான பலன்களைத் தரும். திருமணமானவர்கள் ஒவ்வொரு வேலையிலும் உங்கள் துணையின் ஆதரவைப் பெறுவதோடு, அவர்களின் அன்பையும் பெறுவீர்கள். மாத தொடக்கத்தில் உங்கள் எதிரிகளால் உங்களுக்கு சில பதற்றங்கள் ஏற்படக்கூடும். உங்கள் செலவுகளைப் பற்றி நீங்கள் கவலைப்படுவீர்கள். ஆனால் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் நிதி நிலைமை நன்றாக இருக்கும். வருமானத்திலும் அதிகரிப்பு இருக்கும். ஆனால் இது மாதத்தின் இரண்டாம் பாதியில் மட்டுமே நடக்கும். குடும்ப விஷயங்களில் அதிகமாக தலையிடுவதைத் தவிர்த்து, உங்கள் வேலையில் அதிக கவனம் செலுத்துங்கள். வேலை செய்பவர்களுக்கு நல்ல நேரம். நீங்கள் உங்கள் செயல்திறனையும் மேம்படுத்துவீர்கள், இது உங்கள் வேலை நிலையை மேம்படுத்தும். வியாபாரம் செய்பவர்களுக்கு அவர்களின் வேலையிலிருந்து நல்ல லாபம் கிடைக்கும். மேலும் நீங்கள் சில தொண்டுகளையும் செய்யலாம்.

**வணங்க வேண்டியதெய்வம்:** சனீஸ்வரர் வழிபாடு, **ஸ்லோகம்:** சனி காயத்திரி, **பரிகாரம்:** சனிஸ்வரருக்கு விளக்கு ஏற்ற வேண்டும். **சந்திராஷ்டமம்:** பங்குனி 23-ம் தேதி 06/04/2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.34மணி முதல் பங்குனி மாதம்25ம் தேதி 08/04/2025 செவ்வாய்க்கிழமை பகல் மணி 11.22 வரை




***மகர ராசி அன்பர்களே,*** *ஏப்ரல் மாதம் உங்களுக்கு ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். காதல் வாழ்க்கை கொஞ்சம் சவாலானதாக இருக்கலாம். உங்கள் அன்புக்குரியவரின் நடத்தை இப்போது நன்றாக இருக்காது, அவரது உடல்நிலையும் மோசமடையக்கூடும், எனவே பொறுமையாக இருங்கள். உங்கள் நிதி நிலைமை நன்றாக இருக்கும். உங்கள் வருமானம் நன்றாக இருக்கும், மேலும் உங்கள் வங்கி இருப்பும் அதிகரிக்கும், இதன் காரணமாக உங்கள் நிதி நிலை நன்றாக இருக்கும். உங்கள் குடும்பத்தினரும் உங்களுக்கு ஆதரவளிப்பார்கள்.உங்கள் கடின உழைப்பின் மூலம் நீங்கள் ஒரு நல்ல பதவியைப் பெற வாய்ப்புள்ளது, எனவே உங்கள் கடின உழைப்பைத் தொடருங்கள். வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு நேரம் கொஞ்சம் பலவீனமாக இருக்கும். எச்சரிக்கையுடன் தொடரவும், மாணவர்களைப் பற்றிப் பேசுகையில், கிரகங்களின் நிலை இப்போது மிகவும் சாதகமாக இல்லாததால், அவர்கள் தங்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். உடல்நலம் மேம்படும். &&&&&&&&&&&&*

***வணங்க வேண்டியதெய்வம்:*** *ஞாயிற்றுகிழமை தோறும் தக்ஷிணா மூர்த்தியை வழிபாடு,* ***ஸ்லோகம்:*** *குரு அஷ்டகம்,* ***பரிகாரம்:*** *அம்பாளுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.* ***சந்திராஷ்டமம்:*** *பங்குனி 25-ம் தேதி 08/04/2025 செவ்வாய்க்கிழமை பகல் 11.23 மணி முதல் பங்குனி 27-ம் தேதி 10/04/2025 வியாழக்கிழமை இரவு மணி 8.38 வரை*




**கும்ப ராசி அன்பர்களே,** அன்பர்களே, ஏப்ரல் மாதம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். திருமணமானவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பார்கள், மேலும் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள். உங்கள் ஆளுமையில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள். வேலை செய்பவர்களுக்கு லாபம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. உங்களுக்கு பெரிய ஊக்கத்தொகை கிடைக்கலாம் அல்லது உங்கள் செலவுகளுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் நிதி நிலைமை சாதகமாக இருக்கும், மேலும் செலவுகளும் கட்டுக்குள் இருக்கும். இந்த மாதம் தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் திட்டங்களுடன் முன்னேற நீங்கள் தயாராக இருக்க வேண்டும். சொத்து விஷயங்களில் உங்களுக்கு லாபம் கிடைக்கும். மாணவர்களைப் பொறுத்தரை அவர்களுக்கு நன்றாக இருக்கும். இப்போது நீங்கள் உங்கள் படிப்பில் கடினமாக உழைப்பீர்கள், இது உங்களுக்கு சிறந்த பலன்களைத் தரும். நீங்கள் ஏற்கனவே ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அதில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். நீங்கள் முழு சக்தியுடன் உணர்வீர்கள்.

**வணங்க வேண்டியதெய்வம்:** கால பைரவரரை வழிபாடு **ஸ்லோகம்:** கால பைரவர் அஷ்ட்டகம், **பரிகாரம்:** சனிக் கிழமை தோறும் காலபைரவருக்கு நெய் தீபம் **சந்திராஷ்டமம்:** பங்குனி 27-ம் தேதி 10/0/2025 வியாழக்கிழமை இரவு 8.30 மணி முதல் பங்குனி 30-ம் தேதி 13/04/2025 ஞாயிற்றுக்கிழமை காலை மணி 7.47 வரை




**மீன ராசி அன்பர்களே,** ஏப்ரல் மாதம் உங்களுக்கு நல்ல மாதமாக இருக்கும் என்கிறார் கணேஷா. திருமணமானவர்களின் குடும்ப வாழ்க்கையும் சிறப்பாக இருக்கும். உங்கள் துணைவரின் ஆதரவுடன், உங்கள் வாழ்க்கையில் நல்ல முடிவுகளை எடுக்க முடியும், மேலும் அவரது ஆலோசனை வணிகத்திலும் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இந்த மாதம் காதல் வாழ்க்கைக்கும் நல்லது. இந்த மாதம் வேலைக்குச் செல்பவர்களுக்கு நல்லது. உங்கள் புத்திசாலித்தனத்தாலும் திறமையாலும் வெற்றி பெறுவீர்கள். உங்கள் வேலையின் முன்னேற்றத்தில் உங்கள் முதலாளி திருப்தி அடைவார், மேலும் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். இந்த மாதம் வியாபாரம் செய்பவர்களுக்கும் நல்லது. மாணவர்களைப் பற்றிப் பேசுகையில், அவர்கள் படிப்பில் சில சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். இது குடும்ப சூழல் காரணமாக நிகழலாம். உடல்நலக் கண்ணோட்டத்தில், இப்போது நீங்கள் உங்கள் உடல்நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கும், ஏனென்றால் உங்கள் உடல்நலம் மோசமடையக்கூடும். காயம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. அத்தகைய சூழ்நிலையில், நீங்கள் பொறுமையுடனும் எச்சரிக்கையுடனும் செயல்படுவது நல்லது.

**வணங்க வேண்டியதெய்வம்:** சிவ பெருமான் வழிபாடு **ஸ்லோகம்:** வில்வ அஷ்டகம், **பரிகாரம்:** திங்கள்கிழமை தோறும் சூரியபகவானுக்கு நெய் தீபம் ஏற்ற வேண்டும். **சந்திராஷ்டமம்:** பங்குனி மாதம் 30.ம் தேதி 13/04/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.48மணி முதல் சித்திரை மாதம் 2ம் தேதி 15/04/2025 செவ்வாய்க்கிழமை இரவு மணி 7.30 வரை

புளியங்குடி காவல் சரகம் சொக்கம்பட்டியில்

# இருசக்கர வாகனத்தில் கடத்தி வந்த 43 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல்



தென்காசி மாவட்டத்தில் போதைப்பொருட்கள் புழக்கத்தால் மாணவர்கள் பாதிக்ககூடாது என்பதை கருத்தில் கொண்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அரவிந்த் அவர்கள் போதைப்பொருட்கள் விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி தென்காசி மாவட்ட காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன்பேரில், புளியங்குடி காவல் ஆய்வாளர் திரு.ஷியாம் சுந்தர் அவர்கள் மற்றும் சொக்கம்பட்டி காவல் உதவி ஆய்வாளர் திரு.உடையார்சாமி தலைமையிலான போலீஸார் வம்சவிருத்தி நகர் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தை சோதனையிட்டதில் 43 கிலோ புகையிலைப் பொருட்கள் இருப்பது தெரியவந்தது. தொடர்ந்து, புகையிலைப் பொருட்களையும் இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்த போலீஸார், அதைக் கடத்தி வந்த புளியங்குடியைச் சேர்ந்த சையதுஅலி(41) என்பவரை கைது செய்தனர்.

நிருபர்: V.ஆறுமுகச்சாமி, புளியங்குடி

# கடலூர் புதுப்பேட்டையில் குட்கா விற்ற 2 பேர் கைது

காவல் குழுவினருக்கு SP திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் பாராட்டு



கடலூர் மாவட்டம் புதுப்பேட்டை காவல் ஆய்வாளர் திரு. அசோகன் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் மற்றும் போலீசார் மணம் தவிழ்ந்த புத்தூர் மெயின்ரோட்டில் உள்ள கடையில் ரகசிய தகவலின்பேரில் சோதனை செய்தனர். அப்போது, அந்தக் கடையில் ரூ.8,400 மதிப்புள்ள 1,050 ஹான்ஸ் பாக்கெட்டுகள் மறைந்து வைக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக அங்காளம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் புஷ்பராஜ்(28), ஒறையூர் கொய்யாதோப்பைச் சேர்ந்த கலியபெருமாள் மகன் அதியமான்(எ)பிரபாகரன்(36) ஆகியோரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வழக்குப் பதிவு செய்தனர்.

குட்காவை கைப்பற்றிய காவல் அதிகாரிகள், காவலர்களை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S. ஜெயக்குமார் IPS அவர்கள் புதுப்பேட்டை காவல் நிலையம் சென்று பாராட்டினார்கள்.

நிருபர்: S.ஜெயச்சந்திரன், கடலூர்

# தேசிய தடகள போட்டியில் பதக்கம் வென்ற SI திருமதி.கீதா: நேரில் அழைத்து பாராட்டிய SP R.ஸ்டாலின் IPS அவர்கள்



கர்நாடக மாநிலம் பெங்களூரில் இந்திய முதுநிலை தடகள கூட்டமைப்பு நடத்திய இந்திய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 2,000 மீ. ஓட்டத்தில் முதல் பரிசு, 400 மீ. தடை ஓட்டத்தில் 2-ம் பரிசு, 100 மீ. தடை ஓட்டத்தில் 2-ம் பரிசு மற்றும் 400 மீ. தொடர் ஓட்டத்தில் 2-ம் பரிசு ஆகியவற்றை பெற்று சிறப்பு சேர்த்த நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.கீதா அவர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. R.ஸ்டாலின் IPS அவர்கள் நேரில் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்கள்.

நிருபர்: J.ஜெயவேல்முருகன், நாகர்கோவில்

# வீடு புகுந்து நகை திருடியவர் கைது; காவல் துறையினர் அதிரடி

## குற்றச்சம்பவங்களை தடுக்க தகவலளிக்க SP Dr K.கார்த்திகேயன் IPS அவர்கள் வேண்டுகோள்

கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலைய பகுதியில் வீடு புகுந்து தங்க நகைகளை திருடிய வழக்கில் தொடர்புடைய குற்றவாளியை கைது செய்த கோவை மாவட்ட காவல்துறையினர்.

கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலைய பகுதியில் வசிக்கும் புவனேஸ்வரி(30) என்பவர் 01.10.2024 அன்று வீட்டை பூட்டி விட்டு அவரது அண்ணன் வீட்டிற்கு சென்றுள்ளார். பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த 10 பவுன் தங்க நகைகள் திருடு போனது தெரியவந்தது.

இதுதொடர்பாக புவனேஸ்வரி சூலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த வழக்கில் குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr K.கார்த்திகேயன் IPS அவர்கள் உத்தரவின்பேரில் தனிப்படைகள் அமைக்கப்பட்டது.

தனிப்படையினர் மேற்கொண்ட புலன் விசாரணையில் கோவை,காளிபாளையம் பகுதியைச் சேர்ந்த நாச்சிமுத்து மகன் செந்தில்குமார்(எ)பால்கார செந்தில்(54) இந்த திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. இந்நிலையில் அவரை கைது செய்த தனிப்படையினர், அவரிடமிருந்து திருட்டுப்போன பொருட்களை பறிமுதல் செய்தனர். மேலும், நெகமம் காவல் நிலைய பகுதியில் ஏற்கெனவே பதிவு செய்ப்பட்டிருந்த திருட்டு வழக்கில் தொடர்புடைய ஒரு இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்நிலையில், திருட்டு குற்றத்தில் ஈடுபட்ட பால்கார செந்தில் மீது, பெரியநாயக்கன்பாளையம், சூலூர்,



போத்தனூர், சிங்காநல்லூர் மற்றும் அவிநாசி பாளையம் ஆகிய காவல் நிலையங்களில் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடையவர் என்பதும் தெரியவந்தது. தொடர்ந்து அவர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

இதைத் தொடர்ந்து கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr K.கார்த்திகேயன் IPS அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், சட்டத்திற்கு புறம்பாக குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

மேலும், குற்ற சம்பவங்களை தடுத்திட பொதுமக்கள் தயங்காமல் கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை எண் 94981-81212 , வாட்ஸ்அப் எண் 77081-00100 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் எனவும், தகவல் தெரிவிப்போரின் ரகசியங்கள் பாதுகாக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

நிருபர்: P.நடராஜ், கோவை



# மதுரை தற்கொலைக்கு முயன்ற இளைஞரின் உயிரை காப்பாற்றிய காவலர்கள்

## நேரில் அழைத்து பாராட்டிய ஆணையர் திரு.J.லோகநாதன் IPS அவர்கள்

மதுரை மாநகர் திருப்பரங்குன்றம் மேம்பாலத்தின்மீது கடந்த 19.03.2025 அன்று, வங்கியில் வாங்கிய கடனை திருப்பி செலுத்த இயலாமல் அதிக கடன் பிரச்சினையால் மேம்பாலத்தில் இருந்து இருப்புப் பாதையில் ரயில் முன் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற மதுரை நிலையூரைச் சேர்ந்த கணேசன் என்பவரது மகன் குட்டி கமல்(27) என்பவர் முயன்றுள்ளார்.

இதை கவனித்த திருப்பரங்குன்றம் போக்குவரத்து பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ரமேஷ் மற்றும் மாட்டுத்தாவணி காவல் நிலைய முதல்நிலைக் காவலர் திரு.அய்யனார் செல்வம் மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த லட்சுமணன் ஆகியோர் சாமர்த்தியமாக செயல்பட்டு, தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இளைஞரை காப்பாற்றி அறிவுரை வழங்கினர்.

காவலர்களின் இந்த செயலை பாராட்டும் விதமாக மாநகர காவல் ஆணையர் திரு.J.லோகநாதன் IPS அவர்கள் சம்பந்தப்பட்ட காவலர்களை நேரில் அழைத்து பாராட்டி நற்சான்றிதழ் மற்றும் பண வெகுமதி வழங்கினார்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை

## விபத்தில் காயமடைந்தவரை மீட்டு சிகிச்சைக்கு அனுப்பிய கடலூர் SP திரு.S.ஜெயக்குமார் IPS




கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் கடலூரிலிருந்து மாலை ரோந்து பணியாக குறிஞ்சிப்பாடி, குள்ளஞ்சாவடி, ஆலப்பாக்கம் வழியாக பூண்டியாங்குப்பம் நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தபோது சாலை விபத்தில் அடிபட்டு கிடந்த தம்பிபேட்டையைச் சேர்ந்த ராஜேஷ்(32)என்பவரை கண்டவுடன் வாகனத்தை நிறுத்தி அதிவிரைவு படை வீரர்கள் மூலம் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து, பின்னர் காயமடைந்து கிடந்த நபரை காக்கும் பொருட்டு அவரை பத்திரமாக தூக்கிவந்து ஆம்புலன்ஸ் ஏற்றி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்.

சிறப்பு நிருபர்: P.முத்துகுமரன், கடலூர்

மனிதனை பலவீனமாக்குவது
அவன் எண்ணங்களும் செயல்களும்தான்..
மனிதனின் எதிர்மறையான எண்ணங்கள்
அவனை பலவீனமாக்குகிறது..
நேர்மறையான எண்ணங்கள்
அவனை பலவானாக மாற்றுகிறது..

– ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்









**தென்காசி மாவட்ட காவல்துறை மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பில்**

# SP திரு.அரவிந்த் அவர்களின் தலைமையில் மரக்கன்றுகளை நட்ட காவல் குழுவினர்

தென்காசி மாவட்ட காவல்துறை மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பாக இயற்கை வளங்களை பாதுகாக்கும் விதமாகவும், மரம் நடுவதை ஊக்குவிக்கும் விதமாகவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அரவிந்த் அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் காவல் துறையினர் மற்றும் அமைச்சு பணியாளர்கள் சுமார் 70 மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதேபோல, மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் 1,700-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை பகிர்ந்து வழங்கி அனைத்து காவல் நிலையங்களிலும் மரம் நட்டு பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள், காவல் ஆளினர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி



## கோடைகாலத்தில் வெயிலை சமாளிக்க திருச்சியில் காவல் துறையினருக்கு

# பழச்சாறு, நீர்மோர் மற்றும் சோலார் தொப்பி வழங்கிய மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள்

கோடை காலத்தில் சாலை சந்திப்புகளில் நின்று பணிபுரியும் போக்குவரத்து காவல்துறையினருக்கு பழச்சாறு மற்றும் மோர் வழங்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, டிவிஎஸ் டோல்கேட் அருகில் உள்ள போக்குவரத்து சந்திப்பில் போக்குவரத்து காவல் ஆளிநர்கள் கோடை காலங்களில் பணிபுரியும் போது சோர்வடையாமலும், புத்துணர்ச்சியுடனும் பணிபுரியும் வகையில் சோலார் தொப்பி, இளநீர், நீர்மோர் மற்றும் பழச்சாறு வழங்கும் நிகழ்ச்சியை திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள் துவங்கி வைத்தார்கள். மேலும் கோடைகாலங்களில் போக்குவரத்து காவல் ஆளிநர்கள் தங்களது உடல்நலனை அக்கறையுடன் பேணிக்காத்திட அறிவுரைகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் காவல் துணை ஆணையர்கள் வடக்கு மற்றும் தெற்கு காவல் உதவி ஆணையர்கள், போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் மற்றும் ஆளிநர்கள் கலந்து கொண்டார்கள்.

தலைமை நிருபர்:
M.ராக்கேஷ் சுப்ரமணியன், திருச்சி

# சாலையில் விபத்து ஏற்படுவதை தடுக்க பள்ளத்தை சரிசெய்த SSI

## பாராட்டும் பொதுமக்கள்



தூத்துக்குடியில் 4ம் கேட் சாலையில் ஏற்பட்ட பள்ளத்தை வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு தாமாக முன்வந்து சரி செய்த போக்கு வரத்துகாவல் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு பொதுமக்கள் பாராட்டு.

தூத்துக்குடி 4ம் கேட் சாலையில் ஏற்பட்ட பள்ளத்தில் வாகன ஓட்டிகள் சிக்கி விபத்து ஏற்படா வண்ணம் தடுக்கும் பொருட்டு, (15.03.2025) அங்கு போக்குவரத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த மத்தியபாகம் போக்குவரத்து காவல்பிரிவு சிறப்பு தவிஆய்வாளர் திரு. வள்ளிநாயகம் அப்பகுதியில் இருந்த மணலை மூட்டையில் அள்ளி பள்ளத்தில் கொட்டி சரி செய்தார். சாலையில் ஏற்பட்ட பள்ளத்தில் சிக்கி வாகன ஓட்டிகளுக்கு விபத்து நேரிடாமல் இருப்பதற்காக தாமாக முன்வந்து மனிதாபிமானத்துடன் மண்ணைகொட்டி பள்ளத்தை சரிசெய்த மேற்படி போக்குவரத்துகாவல் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளரை பொதுமக்கள் பாராட்டினர்.

நிருபர்: N.ராமசாமி, தூத்துக்குடி



## தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில்

# DIG P.மூர்த்தி IPS தலைமையில் டிஜிட்டல் ஆதாரம் சேகரிப்பு பயிற்சி முகாம்

திருநெல்வேலி சரகமான தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பணி புரியும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முதல் சார்பு ஆய்வாளர் வரை மொத்தம் 60 நபர்களுக்கு 15.03.2025 தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் DIG முனைவர் பா.மூர்த்தி IPS அவர்கள் உத்தரவின் பேரில், தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் தலைமையில், தென்காசி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (Cyber Crime) திரு.ஜுலியஸ் சீசர் அவர்களது மேற்பார்வையில் டிஜிட்டல் ஆதாரம் சேகரிப்பு தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியில் டிஜிட்டல் அல்லது மின்னணு சான்றுகள் என்பது ஓர் வழக்கில் நீதிமன்றத்திற்கு வழங்கப்படும் பல்வேறு சாட்சிகளில் ஒன்றாகவும். இவை விசாரணைக்காக பயன்படுத்தக்கூடிய டிஜிட்டல் வடிவத்தில் சேமிக்கப்படும் ஆதரங்களின் ஒன்றாகும் இவை வீடியோ, ஆடியோ, இணையவழி மற்றும் தரவு பரிமாற்றம் போன்ற அனைத்தையும் சேகரிப்பது குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும் இத்தகைய டிஜிட்டல் ஆதாரத்தை பயன்படுத்தி குற்றவாளிகளை கண்டறிவது குறித்தும் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் காவல்துறை துணை தலைவர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.

புகழ் வணக்கம்

# 'நாவலர்' நா.மு.வேங்கடசாமி நாட்டார்

▪ 2 ஏப்ரல் 1884 – 28 மார்ச் 1944 ▪



தமிழ்ப் பேராசிரியரும், எழுத்தாளரும், 'நாட்டார் ஐயா' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும், வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டாற்றியவருமான 'நாவலர்' நா.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நினைவுநாள் (28/3/1944) புகழ்_வணக்கம்.

சிறந்த தமிழ் அறிஞரான அ.ச.சரவண முதலியாருடன் இணைந்து திருவிளையாடல் புராணத்துக்கு உரை எழுதியவர், ஐயா நா.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள்!

ஐயா நா.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள், பல ஆய்வு நூல்கள், உரை நூல்களைப் படைத்துள்ளார்; மேலும், பல புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பல நூல்களை எழுதியுள்ளார் இவர்!

தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகத்தார் கேட்டுக்கொண்டதால், 'தேவாரத் திரட்டு', 'தண்டியலங்காரப் பழைய உரை', 'யாப்பருங்கலக் காரிகை உரை' ஆகியவற்றுக்கு திருத்தங்கள் செய்து கொடுத்தார் இவர், என்பது குறிப்பிடத்தக்கது!

புதிய செய்தியோ, புதிய ஆய்வுக் குறிப்போ இல்லாமல் இவரது உரை இருந்ததில்லையாம்; சிறந்த சொற்பொழிவாளரான இவருக்கு, சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் 1940-ல் 'நாவலர்' பட்டம் வழங்கியுள்ளது!

---

# காதல்-காமம் வேறுபாட்டை அறிவோம்!

காதல்-காமம் இரண்டுக்கும் இடையேயான உணர்வுப்பூர்வமான வித்தியாசங்களை புரிந்து கொள்ளாமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இதயங்கள் இணைவது காதல்;
உறவால் உடல்கள் இணைவது காமம்.

அழகை ரசிப்பது காதல்;
அந்த அழகை அனுபவிப்பது காமம்.

பிரதிபலன் எதிர்பார்க்காமல் பழகுவது காதல்;
பிரதிபலனோடு பழகுவது காமம்.

எதிர்பாலினத்தவரின் நன்மை, எதிர்காலம் கருதி அக்கறை கொள்வது காதல்;
உடல் சுகத்தைத் தாண்டி சிந்திக்க மறுப்பது காமம்.

காமமின்றி காதல் இல்லை என்பது ஆண்களின் எண்ணம். காதலுக்காகவே காமம் என்பது பெண்களின் நிலைப்பாடு.

ஓர் ஆண், தான் பாலியல் இன்பம் அனுபவிக்க எந்த யுக்தியையும் எடுப்பான்.
ஒரு பெண் அதை தடுப்பதற்கு முயற்சி செய்வாள்.

சில நேரங்களில் வலு கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகிறாள். தனது மனதைக் கவர்ந்திழுக்காத எந்த ஆண்மகனையும் தன்னோடு உறவாட பெண்கள் அனுமதிப்பதில்லை.

காதலின் ஆரம்பநிலையில் அவர்கள் தனது மனதினுள் நுழையாத காதலனோடு பாலியல் உறவில் ஈடுபட மறுக்கிறார்கள். அது ஆண்களுக்கு தெரிவதில்லை.

காதலர்களுக்கு பாலியல் உள்ளுணர்ச்சி உச்சகட்டத்தில் இருக்கும் போது அது வெளிப்படுத்தும் உணர்ச்சி மனதை களிப்பூட்டி கிளர்ச்சியடையச் செய்கிறது. அந்த கிளர்ச்சி தான் பெண்களுக்கு காதலாகவும், ஆண்களுக்கு காமமாகவும் உருப்பெற அடித்தளமிடுகிறது.

பாலியல் உணர்ச்சி என்பது ஆண்களின் தவறல்ல; அது அவர்களின் மரபணுக்களின் வெளிப்பாடு. ஆண்களின் பாலுறவு ஆர்வமும், பெண்களின் பாலுறவு ஆர்வமும் வித்தியாசமானது. இவர்களில் நல்லவர்கள் அல்லது கெட்டவர்கள் என்று எவருமில்லை. ஆனால், இருவரும் வேறுபட்டவர்கள், மாறுபட்டவர்கள். ஒருவருக்கொருவர் உணர்வுகளை புரிந்து கொண்டால்தான், இருவருக்குள்ளும் இணக்கம் அதிகரிக்க வழிவகுக்கும்.




**பணியில் உயிரிழப்பு மற்றும் விபத்தால் பாதிக்கபட்ட**

# காவலர் குடும்பத்திற்கு உதவும் காக்கி உதவும் கரங்கள் குழு

தமிழ்நாடு காவல்துறை 2011, பேட்ஜ் காவல்குழுவினர் நடத்தும் காக்கி உதவும் கரங்கள் குழுவின் இரண்டாவது ஒன்று கூடல் நிகழ்ச்சி தென்காசியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அரவிந்த் அவர்கள் கலந்து கொண்டு காவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் காவலர்களுக்கு தலைக்கவசம் அணிவது பற்றியும் செல்போன் பேசிக்கொண்டு வாகனங்கள் ஓட்டக்கூடாது எனவும் அறிவுறுத்தினார்.
காக்கி உதவிக்கரங்கள் குழு அவர்களின் நோக்கம் பணியில் இருக்கும் போது இறக்கும் காவலர்களுக்கு மற்றும் பணியில் இருக்கும் போது விபத்து ஏற்பட்டு மீள முடியாத பாதிப்பிற்க்குள்ளாகிய காவலர்களுக்கு உடனடியாக உதவிக் கரங்கள்குழு மூலம் அவர்கள் குடும்பத்தினருக்கு உதவித்தொகை வழங்குதல் உதவும் கரங்கள் குழுவின் நோக்கம் ஆகும். இதுவரை இந்த உதவும்கரங்கள் குழு மூலம் 47 காவல்துறையினர் குடும்பத்திற்கு 7,92,37,737 ரூபாய் வழங்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது பாராட்டுக்குரியது. இந்த நிகழ்வில் ஏராளமான காவல்துறையினர் கலந்து கொண்டனர். காக்கி உதவும் கரங்கள் குழுவினரை தென்காசி SP திரு.அரவிந்த் அவர்கள் பாராட்டினார்.

சட்ட ஆலோசகர்: K.அருணாச்சலம், தென்காசி.

---

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438

**இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்..**



# திரிபலா பொடி

மலச்சிக்கல் தீரும், குடல் புண் ஆறும். இரத்தச் சோகை அதிக உடல் எடை குறையும். உடலில் அதிகப்படியாக உள்ள கொழுப்பு, வெளியேறும். நன்றாக காய வைத்த நெல்லி வற்றல், கடுக்காய்த்தோல், மற்றும் தான்றிக்காய்த்தோல் பொடிகள் சம அளவில் கலந்ததே திரிபலா சூரணம்.

இதை, இரவில் ஒரு தேக்கரண்டி அளவு சுடுதண்ணீரில் கலந்து தினமும் சாப்பிட்டு வர, குடல் புண் ஆறும். இரத்தச் சோகை அதிக உடல் எடை குறையும்.உடலில் அதிகப்படியாக உள்ள கொழுப்பு, வெளியேறும். உடல் முதுமை மாறி, இளமைப்பொலிவு ஏற்படும். மலச்சிக்கல் தீரும். திரிபலாவில் க்ரீன் டீயை விடவும் அதிக ஆண்டி ஆக்ஸிடெண்டுகள் உள்ளதாக ஆய்வு கூறுகிறது.

ஆங்கில மருந்துகள் நிறைய உட்கொள்பவர்கள், இம்மருந்தினை காலை– இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, ஆங்கில மருந்துகளால் உண்டாகும் பக்க விளைவுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

**திரிபலா குடல் அழற்சிக்குக்கூட நல்ல மருந்து**

திரிபலாவை புறக்காயங்களுக்கு மருந்தாகவும் பயன்படுத்தலாம். திரிபலா கலந்த கொதிக்கவைக்கப்பட்ட நீரால் காயங்களைக் கழுவதும் நல்ல பயன் தரும்.

அதேபோல வாய்ப்புண் வருகிற போதும் இதைப் பயன்படுத்தலாம்மேலும் சர்க்கரை நோய்க்கு இணை மருந்தாய் பயன்படுத்தலாம்.

**தொண்டை வலி**

சளி பிடிக்கிறதுக்கு ஒரு நாலைஞ்சு மணி நேரத்துக்கு முன்னாடி பாத்தீங்கன்னா தொண்டை ஒரு மாதிரி கரகரக்கும். அப்பவே தெரியணும், நமக்கு நாளைக்கு சளி பிடிக்கப் போவுதுன்னு. அந்த மாதிரி நேரத்துல நாம் என்ன செய்வேண்டுமென்றல், கொஞ்சம் திரிபலாவை எடுத்து சுடுதண்ணியில போட்டு, நல்லா வாய் கொப்பளிக்க. சளி வராது. தொண்டைக்கும் இதமா இருக்கும்.

பிள்ளை அவ்வப்போது பள்ளிக்கூடத்திலிருந்து கொண்டுவரும் மற்ற தொண்டை வலிகளுக்கும் இது நல்ல மருந்து. வாய் கொப்பளித்து துப்பத் தெரிந்த குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். முழுங்கினாலும் பெரிய பிரச்சினை இல்ல, இருந்தாலும் ரொம்ப சின்ன பிள்ளைங்களுக்கு வேணாம்.

**பல்லிடுக்குப் பிரச்சினை**

சில நேரம் பல்லிடுக்கில் உணவுத் துகள் மாட்டிக் கொள்கிறது. காரட் துண்டு, ஆட்டுக்கறி இப்படி. அப்போது கவனிக்காம விட்டுட்டா, அடுத்த நாள் வலிக்கும். அப்போ அந்தத் துணுக்கை floss போட்டு எடுத்துட்டாலும் வலிக்கும். அந்த நேரத்தில் திரிபலாவை சுடுதண்ணியில போட்டு வாய் கொப்பளிச்சா, அல்லது அந்த இடத்தில் வைத்து லேசாக பல் தேய்ப்பது போலத் தேய்த்தால் வலி மாயமாய்ப் போகிறது. மற்ற வகை பல்/ஈறு வலிகளுக்கும் இதைப் பயன்படுத்திப் பார்க்கலாம்.

**திரிபலா எப்படி நமக்கு உதவுகின்றது?**

திரிபலா என்பது அற்புதமான ஆயுர்வேத மருத்துவத் தயாரிப்பு ஆகும். ஆயுர்வேத மருத்துவர்களால், உலகம் முழுவதும் பரவலாக எந்த நோய்க்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுவது திரிபலா. சர்க சம்ஹிதா என்னும் ஆயுர்வேத நூலில் முதல் அத்தியாயத்திலேயே திரிபலாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது ஆச்சரியமான விஷயமாகும். நெல்லிக்காய், கடுக்காய் மற்றும் தான்றிக்காய் ஆகிய இம்மூன்றின் கலவையானது அற்புதமான காயகல்பமாகி, தேவர்களின் அமிர்தத்தினைப் போல் எந்த ஒரு வியாதியையும் தீர்க்கும் அற்புத சக்தியினைப் பெற்றுள்ளது.

**நோய் எதிர்ப்புச் சக்தி**

ஆயுர்வேதத்தில் திரிபலா என்பது இளமையை பாதுகாக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது நமக்கு முதுமைத் தன்மையை நீக்கி இளமைத்

தன்மையை அதிகரிக்கச் செய்யும் என்று பொருள். இது உடல் ஆரோக்கியத்தினை அதிகரிக்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டவும் உதவுகிறது.

ஆரோக்கியமான வாழ்வில் நோய் எதிர்ப்புச் சக்தி என்பது ஒரு முக்கியமான அங்கமாகும். இது எப்போதுமே அதிகமாகவே இருக்க வேண்டும். நமது உடலில் இயற்கையாகவே அமைந்திருக்கும் தடுப்பு அரண்களைத் தாண்டி, உடலின் உள்ளே நுழையும் கிருமிகளை எதிர்த்துப் போராடும் 'ஆன்டிபாடி' (anti-bodies) எனப்படும் நோய் எதிர்ப்பு சக்திகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய, இந்த திரிபலா உதவுகிறது.

**ஆன்டி-ஆக்ஸிடன்ட்**

உடலில் செல்களுக்கிடையில் நடைபெறும் வளர்ச்சிதை மாற்றத்தில், சக்தி வாய்ந்த ஆன்டி-ஆக்ஸிடன்டாக திரிபலா செயலாற்றுகிறது. நமக்கு முதுமையைத் தரும் முக்கியமான காரணியான "கட்டற்ற காரணிகளை" (free radicals) உற்பத்தி செய்யும் வாய்ப்பைக் குறைக்கிறது. மேலும் செல்கள் முறையாகச் செயல்படுவதற்கு முக்கியமாகத் தேவைப்படும் மைட்டோகாண்டிரியா, கோல்கை உறுப்புகள், உட்கரு ஆகியவை சிறப்பாகச் செயல்படுவதையும் திரிபலா தூண்டுகிறது.

**செரிமானமின்மை**

செரிமானக் கோளாறுகளை திரிபலா அற்புதமாக குணப்படுத்துகிறது. அதிலும் உணவுப்பாதையில், மலத்தினை வெளித்தள்ளும் குடலியக்கத்தை சீராக செயல்பட வைக்கிறது. மேலும் இரத்தத்தில் உள்ள கொழுப்பினை கரைக்க தேவைப்படும் பைல் (Bile) திரவத்தினை கல்லீரலிலிருந்து சுரக்கவும் உதவுகிறது. உணவுப்பாதையில் தேவையான கார அமிலநிலையை (pH level) தேவையான நிலையில் பேணுவதற்கும் துணைபுரிகிறது.

**மலச்சிக்கல்**

திரிபலா ஒரு சிறந்த குடல் சுத்திகரிப்பானாகச் செயல்படுகிறது. மலச்சிக்கலுக்கு அதிகமாகப் பரிந்துரைக்கப்படும் இயற்கை மருந்து திரிபலாவாகும். உடலிலுள்ள நச்சுப்பொருட்களை நீக்கும் நச்சு நீக்கியாகவும் இது செயலாற்றுகிறது. சிறந்த மலமிளக்கியாகவும் பயன்படுகிறது.

**வயிற்றுப் பூச்சிகளும் தொற்றுகளும்**

வயிற்றில் பூச்சி வளர்வதையும், தொற்றுக்களையும் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்தது தான் திரிபலா. குறிப்பாக வயிற்றிலிருந்து நாடாப்புழுக்களையும், வளையப்புழுக்களையும் வெளியே அகற்றுவதற்கு பெரிதும் உதவுகிறது. மேலும் உடலில் பூச்சிகளும், நுண்கிருமிகளும் வளர்வதற்கு உதவாத நச்சு நிலையை உடலில் பேணுவதற்கு திரிபலா உதவுகிறது.

**இரத்தசோகை**

இரத்தத்தில் இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க திரிபலா உதவுகிறது. இதன் மூலம் இரத்த சோகை என்னும் நோயைத் தீர்க்க முடியும். (இரத்த சோகை என்பது இரத்தத்தில், ஹீமோகுளோபின் எனப்படும் இரத்த சிவப்பு அணுக்களின் அளவு குறைந்து காணப்படும் நிலையாகும்).

**சர்க்கரை நோய்**

திரிபலா சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பு மிக்கது. நமது கணையத்தினைத் (pancreas) தூண்டி, இன்சுலினை சுரக்கச் செய்கிறது. கணையத்தில் தான் இன்சுலினைச் சுரக்கும் லாங்கர்ஹான் திட்டுக்கள் (langerhans) எனப்படும் சுரப்பிகள் உள்ளன. மேலும் உடலில் குளுகோஸின் அளவை சமநிலையில் பேணுவதில் பெரும் பொறுப்பு வகிப்பது இன்சுலின் ஆகும். மேலும் திரிபலா கசப்புச் சுவையுடன் இருப்பதனால், சர்க்கரை நோயின் ஒரு நிலையான ஹைப்பர்கிளைசீமியா (hyperglycemia) எனப்படும் அதிக சர்க்கரை நிலையில், இதனை எடுத்துக் கொள்வது சிறப்பானது.

**உடல்பருமன்**

இயல்பை விட உடல் பருமனானவர்கள், திரிபலாவை உட்கொள்வது மிகவும் பயன்தரும். இதனுடைய மருத்துவக் குணத்தினால் உடலிலுள்ள கொழுப்பின் அளவினைக் குறைக்க முடியும். நமது உடலில் கொழுப்பு படிவதற்குக் காரணமான அடிபோஸ் செல்களைக் குறி வைத்து செயல்படுவதால், கொழுப்பின் அளவு குறைகிறது. இதன் மூலம் உடல் பருமன் கட்டுப்படுத்தப்படுகிறது.

**சருமப் பிரச்சனைகள்**

இது இரத்தத்தினைச் சுத்தம் செய்து இரத்தத்திலுள்ள நச்சுப்பொருட்களை வெளியேற்றும் தன்மை கொண்டிருப்பதால், சரும நோய்களுக்கான மருத்துவத்தில் பெரும் பங்காற்றுகிறது. இரத்தத்தினைச் சுத்திகரிக்கும் தன்மை கொண்டிருப்பதால், தொற்று நோய்களையும் தீர்க்கும் குணம் கொண்டுள்ளது.

**சுவாசக் கோளாறுகள்**

சுவாசப் பாதையிலுள்ள அடைப்புகளை நீக்கி சீரான சுவாசம் ஏற்பட பெரிதும் உதவுகிறது. சைனஸ் என்னும் நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் இது செயல்படுகிறது. மேலும் நமது சுவாசப்பாதையிலுள்ள சளியில் பாக்டீரியாக்கள் வளராமலும் இது தடுக்கிறது.

**தலைவலி**

தலைவலிக்கு நிவாரணமாகவும் திரிபலா பயன்படுகிறது. குறிப்பாக வளர்சிதை மாற்றத்தின் இடையூறுகளால் உண்டாகும் தலைவலிக்கு சிறப்பான நிவாரணத்தை அளிக்கிறது.

**புற்று நோய்**

புதுடில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட சமீபத்திய ஆய்வுகளின்படி, திரிபலாவுக்கு புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் இருப்பது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

புற்றுநோய் செல்களில் மைட்டேடிக் நிலையில் ஸ்பிண்டில் வடிவத்தோற்றம் உண்டாவதைக் குறைக்க உதவி செய்கிறது. அதன்மூலம், புற்றுநோய் செல்களில் மெடாஸ்டேடிஸ் (metastasis) வளரும் அபாயத்தையும் குறைக்கிறது.



# நில உச்சவரம்பு சட்டம்

நில உச்சவரம்பு (Ceiling on Land Holding) என்பது தனி நபர்கள் வைத்திருக்கும் நில உடைமைக்கு உச்சவரம்பை நிர்ணயித்து அதற்கு மேற்பட்ட உபரி நிலங்களை அரசு கையகப்படுத்தும் முறை ஏதுவாக 1958-ல் இந்திய அரசால் கொண்டு வரப்பெற்ற சட்டம் ஆகும்.

வேளாண்மையைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் குடிவாரச் சட்டங்கள் தவிர வேறுபல நடவடிக்கைகளும் இந்திய அரசால் எடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்று நில உடைமைகளுக்கு உச்சவரம்பை நிர்ணயிப்பதாகும்.

ஒரு குடும்பம் அல்லது தனிநபருக்குரிய உயர்ந்த பட்ச நிலங்கள் என தீர்மானித்து அதற்கு மேல் உள்ள நிலத்தை அதற்குறிய இழப்பீட்டுத் தொகையை நில உடமையாளருக்கு வழங்கி கையகப்படுத்தும் நிலங்களை உபரி என வகை படுத்திக்கொள்ளும் நடைமுறைக்கு உரியவாறு ஏற்படுத்தப்பட்டது நில உச்சவரம்பு சட்டம் என்கிறோம். இது இரண்டு பிரிவுகளாகும்.

1. தற்போதுள்ள உடைமைகள் மீது உச்சவரம்பு நிர்ணயிப்பது. 2. எதிர்காலத்தில் வாங்கப்படும் நிலங்கள் மீது உச்சவரம்பு நிர்ணயிப்பது.

**நில உச்சவரம்புச் சட்டத்தின் இயல்புகள்**

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநில அரசுகள் நில உச்சவரம்புச் சட்டங்களை இயற்றின. ஆனால் நில உச்சவரம்பின் அளவு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது. 1972-ல் நடந்த மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தில் நாடுமுழுவதும் ஒரே மாதிரியான நில உச்சவரம்பு அளவே கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

**இந்தியாவில் நில உச்சவரம்புச் சட்டங்கள் கீழ்வரும் இயல்புகளைக் கொண்டுள்ளன.**

1972-ஆம் ஆண்டிற்கு முன் ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் குறிப்பிட்ட அளவு நிலம் வைத்துக் கொள்ள நில உச்சவரம்பு குடும்பம் முழுவதற்குமே பொருந்துவதாக உள்ளது.

குடும்பம் என்பது கணவன் மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் கொண்டது. ஒரு குடும்பத்தில் ஐந்து நபர்களுக்கு அதிகமான நபருக்கு அதிகப்படியான நிலம் அனுமதிக்கப்படும்.

1972-க்கு முன் உயர்ந்த பட்ச நில அளவும் அதிகமாக இருந்தது. சான்றாக ஆந்திரப்பிரதேசத்தில் 25 முதல் 200 ஏக்கராகவும், தமிழ்நாட்டில் 12 முதல் 60 ஏக்கராகவும் இருந்தது.

இது 1972-க்குப் பின் சீரமைக்கப்பட்டது. இருபோக சாகுபடிக்கு நீர்ப்பாசன வசதியைக் கொண்ட பகுதிகளில் ஒரு குடும்பத்திற்கான உச்சவரம்பு 20 ஏக்கராகவும்; தனியார் நீர்ப்பாசன வசதியைக் கொண்ட நிலங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 40 ஏக்கராகவும்; பிற நிலங்களுக்கு 60 ஏக்கராகவும் உள்ளது.

1972-க்கு முன் நில உச்சவரம்பிலிருந்து பலவகையான சிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இதனால் நில உச்சவரம்புச் சட்டங்கள் தோல்வியுற்றன. 1972-க்குப் பின் இயற்றப்பட்ட சட்டங்களில் விலக்கு அளிக்கப்பட்ட நிலங்களில் எண்ணிக்கைக் குறைக்கப்பட்டது.

தகவல்: குரு.சரவணன்

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**


JCB, டிப்பர் வாடகைக்கு கிடைக்கும்
எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ் சிறந்த முறையில் செய்து தரப்படும்
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
Prop: S.அன்வர்தீன் 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு,
பாலக்கரை, திருச்சி- 620 008.

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**

**4B, GD. Floor, 4th Block Adilti Paradise,**
**No.1, 2nd North Street, Poombuhar Nagar,**
**Kolathur, Chennai - 600 099.**
**Cell: 97 89 49 14 38, 766 755 1542**

**TO**